# ஆறுமுகம் கனகரெட்ணம்

# தி/பள்ளிக்குடியிருப்பு

# வாழ்வியலும்

# வரலாறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகம் கனகரெட்ணம்

## தி/பள்ளிக்குடியிருப்பு

# "வாழ்வியலும் வரலாறும்"

ஆறுமுகம் செல்வநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | ஆறுமுகம் கனகரெட்ணம் |
| நூல் விடயம் | : | வாழ்வியலும் வரலாறும் |
| நூலாசிரியர் | : | ஆறுமுகம் செல்வநாயகம் |
| விலாசம் | : | தி/பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர். +94 26 2224905, +94775420138 |
| பக்கங்கள் | : | 116 |
| தாளின் வகை | : | 70 கிராம் பாங்க் |
| முதற்பதிப்பு | : | 2023 |
| வெளியீடு | : | அக்ஷறா வெளியீடு |
| அச்சகம் | : | ஷஹானா கிறாபிக்ஸ், திருகோணமலை +94776310531 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கல்வி சமூக முன்னேற்றத்திற்கு

அர்ப்பணித்த எமது பெற்றோர்

ஆறுமுகம் – தங்கப்பிள்ளை யர்க்கும்

தமிழுக்காய் தமிழ் மண்ணுக்காய்

தன்னுயிரை ஆகுதியாக்கிய

அமரர் ஆறுமுகதாசனுக்கும்

சமர்ப்பணம்



ஆறுமுகம்



தங்கப்பிள்ளை



ஆறுமுகதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

தி/பள்ளிக்குடியிருப்பின் வரலாற்றில் முதல் ஆசிரியராக சிறப்பான பணியை ஆற்றி வாழ்வியலில் முன்மாதிரியாகத் திகழ்ந்து 81 எண்பத்தொரு வருடங்கள் வாழ்ந்து இவ்வுலகை விட்டேகிய திரு.ஆறுமுகம் கனகரெட்ணம் அவர்களின் பன்முகப் பார்வையாக இந்நூல் அமைகின்றது.

ஆறுமுகம் - தங்கப்பிள்ளை அவர்களின் மூத்த மகனான கனகரெட்ணம் அவர்களை கல்வியில் மேலோங்கச் செய்வதற்காக பெற்றார் மிக அர்ப்பணிப்பாக செயற்பட்டனர்.

அவரது கல்வி, ஆசிரியர், அதிபர், பிரதி அதிபர் என பல வகிபாகங்களில் சிறந்து விளங்கியதோடு விளையாட்டு, கலைத்துறை, ஆன்மீகம், முதலானவற்றிலும் சிறந்து விளங்கிய வாழ்வியல் முறைமை அனைவருக்கும் முன்மாதிரியானது.

எதிர்காலத்தவர்களும் சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருப்ப-வர்களுக்கும் இக்கிராமத்தின் சமூகப் பெரியார் அவரது முன்மாதிரி நடத்தைக் கோலங்களும் சிறந்த கற்பிதமாக அமையும்.

அவரிடம் கற்றோர், சக ஆசிரியர்கள், உற்றார், உறவினர் நண்பர்களினதும் - சமூகப் பார்வையை வெளிக்கொணர வேண்டிய தேவையை உணர்வுபூர்வமாக உணர்ந்ததன் நிமித்தம் இத்தொகுப்பு நூல் அமைசின்றது.

**ஆறுமுகம் செல்வநாயகம்**
**தி/பள்ளிக்குடியிருப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகம் கனகரெட்ணம் அவர்களின் வாழ்வியலில்...

**தி**ருக்கோணமலை கொட்டியாபுரப்பற்றின் பள்ளிக்குடியிருப்பில் ஆறுமுகம் தங்கப்பிள்ளை தம்பதியருக்கு தலைமகனாக 08.06.1942ல் பிறந்தார். வட்டவிதானையாரான சரவணமுத்து ஆறுமுகம் அனைவரும் கற்க வேண்டுமென்றும் கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்தவராய் திகழ்ந்தவர்.

அமரர் ஆறுமுகம் கனகரெட்ணம் அண்ணன் வாழ்வியலில் கல்வி, தொழில் ஆசிரியர் - விவசாயம், விளையாட்டு, கலைத்துறை சமூக முன்னேற்றம், ஆன்மீகம், பண்பியல், விழுமியப் பண்புகள் என பல துறைகளில் பல்பரிமானமுள்ளவராக திகழ்ந்தார்.

இளமைக் காலங்களில் சிறந்த வாசகனாக பல்துறை நூல்களைக் கற்று ஆழமான அறிவையும் அனுபவத்தையும் உடையோனாய் அமைதியான அறவாழ்வை மேற்கொண்டு சமூகத்திற்கு பயன்மிக்கோனாக முன்மாதிரியாக திகழ்ந்தார்.

**கல்வியியலில்....**

தி/பள்ளிக்குடியிருப்பு அ.த. பாடசாலை - 1 - 3 வகுப்புகள்

தி/மூதூர் அன்தனிஸ் மகா வித்தியாலயம் - 4ம், 5ம் வகுப்புகள்

திருகோணமலை இந்துக் கல்லூரி - 6 - 10 வகுப்புகள் (S.S.C)

ஆங்கிலம், தமிழ் மொழிமூலம்

மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் - H.S.C (A/L)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தர பாடசாலை தராதரப்பத்திர வகுப்பு (H.S.C) (இன்றைய க.பொ.த (உ/த)) கற்றுக்கொண்டிருந்த வேளை தந்தையின் சுகயீனம் காரணமாக தொடர் கல்வியை நிறுத்தி 1960ல் உதவும் ஆசிரியரானார்.

**தி/நல்லூர் அ.த.க. பாடசாலை - 1961.05.02 (முதல் நியமனம்)**
**மட்/ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - 1963/64**
**தி/நல்லூர் அ.த.க. பாடசாலை - ஆசிரியர், அதிபர்**
**கல்/சம்மாந்துறை விவசாய ஆசிரியர் பயிற்சி - பயிற்சி**
**தி/பெரியவெளி அ.த.க. பாடசாலை - ஆசிரியர்**
**தி/பள்ளிக்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம் - ஆசிரியர் - அதிபர் (1971 - 1975)**
**தி/சேனையூர் மத்திய கல்லூரி - ஆசிரியர், பிரதி அதிபர் (1975 - 1996)**
**கொ/தேசிய கல்வி நிறுவகம் - முகாமைத்துவப் பயிற்சி**
**தி/கலைமகள் இந்துக் கல்லூரி - ஆசிரியர் (1996 - 1997)**
**55வது வயதில் ஒரு வருடம் சிறப்பாக கடமையாற்றி 08.06.1997இல் ஓய்வு பெற்றார்.**

மூதூர் அந்தனிஸ் ம.வி. திருக்கோணமலை இந்துக்கல்லூரிகளில் கற்கும்போது தந்தையாரின் நட்புக்குரியஅதிபர் திரு. திருமதி. கோபால பிள்ளை - மீனாட்சி பிள்ளை அவர்களின் உதவியுடன் கற்றார். அவர்கள் துணையும் அன்பும், ஆதரவும், சகோதரத்துவம் தொடர்கிறது.

1963ல் தந்தையை இழந்த போது கற்றுக்கொண்டிருந்த சகோதரர்கள் அனைவரையும் தொடர்ந்து கற்கச் செய்து, மாட்டுப்பட்டிகளையும் வயல்களையும் தாயுடன் இணைந்து பராமரித்து பாரிய குடும்பப் பொறுப்பேற்று வளர்த்தார்.

**1960 களில் தந்தையின் சுகயீனம் காரணமாக மட்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தர கல்வியை தொடர முடியாமல் ஆசிரிய தொழிலில் இணைந்தார். தந்தையாரை கொழும்பு வைத்தியசாலையில் வைத்து சிறப்பாக பராமரித்தார்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1963.11.17ல் தந்தையை இழந்தோம். இவ்வேளையில் திரு.ஆ.குணராஜரெட்ணம் - வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானப்பிரிவிலும், ஆ.தங்கரெத்தினம் - தி/மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரியிலும் கற்றுக்-கொண்டிருந்தனர். துரைநாயகம், செல்வநாயகம் இருவரும் தி/பள்ளிக்குடியிருப்பு அ.த.க பாடசாலையிலும் நேசதுரை, நவநாயகம் பாடசாலை செல்லாத சிறுவயது 4, 2 வயதுடையோர் அனைவரையும் பாடசாலைக் கல்வி வரையில் சிறப்பாக கற்கவும் ஏற்பாடு செய்தார்.

1966ல் திருமணபந்தத்தில் தி/மல்லிகைத்தீவு செல்லையா இராசபாக்கியம் அவர்களுடன் சிறந்த இல்லற வாழ்க்கையில் இணைந்தது எமக்கு கிடைத்த மற்றுமொரு தாயாக - அண்ணி இணைந்து செயற்பட்டார்.

கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் பாரிய பங்காற்றினார்.
1971 - 75ம் ஆண்டுகளில் தி/பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலையின் ஆசிரியராகவும் - அதிபராகவும் கடமையாற்றிய வேளை பாடசாலையின் உள்ளக மைதானம், பௌதிக வளத்தேவைகளை ஊர்மக்களின் சிரமதானப் பணிமூலம் நிறைவு செய்தார். விளையாட்டு, கலைநிகழ்வுகள், வழிபாடுகள், சமய சமூக விழுமியங்களை மேம்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்தினார்.

1 - 5 வகுப்பிலிருந்து 6ம் வகுப்பு வைக்க முடியாத நிலையில் தானும் அதிபர் பதவியை விட்டு சேனையூர் மகா வித்தியாலயத்திற்கு மாணவர்களையும் சேர்த்து அங்கு உதவி ஆசிரியராக பணியைத் தொடர்ந்தார். இதன் பயனாக பல பட்டதாரிகளும், ஆசிரியர்களும் உருவாக வாய்ப்பு ஏற்பட்டது.

1985ன் பின்னர் பள்ளிக்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம் 6ம் தரம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து க.பொ.த (உ/த) வகுப்புகள் வரை - சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப்பெற்று தி/பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக்கல்லூரியாக மாற்றம் பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இக்கலைமகள் இந்துக்கல்லூரிக்கு பக்கத்து காணிகளையும், விளையாட்டு மைதானத்திற்கான காணியையும் வாங்குவதற்கு ஊர் மக்களுடன் இணைந்து முன்னின்று உதவியவர். கட்டடங்கள் அமைப்பது, எங்கு - எவ்வாறு அமைய வேண்டும் என்ற முழுத்திட்டமிடலும் அவராகவே இருந்தது. க.பொ.த (உ/த) இல் என்ன பாடங்கள் கற்பிப்பது பயன்மிக்கது முதலான ஆலோசனைகளுடன் அம்மாணவர்களுக்கும் தமிழ்ப் பாடம் கற்பித்து உதவியவர்.**

**ஐம்பத்தைந்தாவது வயதில் ஓய்வுக்கு செல்லுமுன் ஒரு வருடம் ஊரின் கலைமகள் இந்துக்கல்லூரியில் ஆசிரியராக செயற்பட்டார். ஒவ்வொரு நாளும் பாடக்குறிப்புடன் உரிய நேரத்திற்கு சமூகமளித்து - நேர முகாமைத்துவம் - கற்பித்தல் நுட்பங்களையும் சிறப்பாக கையாண்டு முன்மாதிரி ஆசிரியத்துவம் உடையோராய் செயற்பட்டு 55வது வயதில் ஓய்வு பெற்றார்.**

**கலைமதி விளையாட்டுக் கழகத்தை உருவாக்கி** சிறந்த கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளராகவும் (செற்றப்) நான்கு பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியை முதன் முதல் மூதூர் பகுதியில் நடாத்துவதற்கும் - மாவட்ட, மாகாகண, அகில இலங்கை ரீதியான போட்டிகளிலும் பங்குபற்றவும் வெற்றிகள் பெறவும் ஊக்கப்படுத்தியவர். சிரேஸ்ட வீரர்களுடன் இணைந்து சிறப்பாக வழிநடாத்தியவர்.

**காற்பந்தாட்டத்தில் திருகோணமலை இந்துக்கல்லூரி, மட்/வந்தாறு-மூலை** மத்திய மகா வித்தியாலயங்களில் உதைபந்தாட்டத்தில் சிறந்த வீரராக செயற்பட்டவர். எமது கலைமகள் இந்துக் கல்லூரி மாணவர்களுக்கும் சிறந்த காற்பந்து பயிற்றுவிப்பாளராக உதவினார்.

**விளையாட்டு மைதானத்தை செப்பனிட்டு சுவட்டு மைதானத்தை** சிறந்த அளவுத்திட்டத்தின் ஊடாக அமைத்து தந்து விளையாட்டுப் போட்டிகள் சரியான ஒழுங்கமைப்பில் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடைபெற வழிப்படுத்தினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டின் மூலம் சிறந்த உடல் - உளவிருத்தியை ஏற்படுத்த முடியுமென்பதை உணரத்தியவர்.

**சிறந்த பாடகரான இவர் இசைக்குழுவை இணைத்து செயற்படுத்தினார்.** பாடகர்கள், இசைக்கருவிகளை வாசிப்பதற்கான பயிற்சியையும் வழங்கி சிறந்த இசைக்குழுவை இயங்கச் செய்தவர்.

**நாடகங்களை எழுதி** - பாத்திரங்களுக்கேற்றவர்களை தெரிவுசெய்து நெறிப்படுத்தி மேடை ஏற்றினார். தொடர்ந்து கலைவாணி கலாமன்றம், கன்னித்தமிழ் கலாமன்றம் என சிறப்பாக இயங்கியது.

திருமலை கோணேஸ் - பரமேஸ் - இசைக்குழுவை அழைத்து சிறப்பான நிகழ்வுகள் நடைபெறச் செய்து கலைத்துறைக்கு சிறப்பான பங்களிப்பினைச் செய்தார்.

**கொம்பு விளையாட்டு நிகழ்வுகளில் 1971, 1976ம் ஆண்டு காலங்களில்** கவிதையரங்கு, திரு. தாமரைத்தீவான் தலைமையிலும், கதாப்பிரசங்கம், கலைநிகழ்வுகளை முன்னின்று நடாத்தியவர்.

**கிராம முன்னேற்ற சங்கம், கூட்டுறவு, சனசமூக நிலையங்களில் முக்கிய செயற்பாட்டாளராக திகழ்ந்து** பல முன்னேற்ற கரமான செயற்பாடுகளை செய்தவர், கடைசிவரை கிராமத்தின் வீதிகள், கோயில் அமைப்புகள், குடிநீர், நூலகம், முதலானவை பற்றி சிறப்பான செயற்பாடுகளுக்கு தூண்டுதல் அளித்துக் கொண்டிருந்தார். குடிநீருக்காக கிணறுகள் சிரமதான மூலமும் எகெட் நிறுவன உதவியுடனும் அமைக்கும்போது சிறந்த ஆலோசகராக திகழந்தார்.

**சமயத்திற் தெளிவும் பக்தியுடையவராக திகழ்ந்தார்** - கதிர்காமம் பாதயாத்திரை பதினேழு தடவைகளுக்கு மேலாக சென்றுள்ளார். கதிர்காம பாத யாத்திரையில் வெள்ளைக்கார சாமியார், அவர் மனைவி இருவரும் நடை பவனியில் கலந்து கொள்வார்கள். இவர்கள் திரு. கனகரெட்ணம் அவர்களை மொழிபெயர்ப்புக்காக அவசியம் இணைத்துக்கொள்வார்கள். வெருகல், கேதீஸ்வரம், முன்னேஸ்வரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர், கீரிமலை என தல யாத்திரைகள் செய்துள்ளார். தேவார தோத்திரப் பாடல்களை பண்ணோடு பாட வல்லவர். திருவெம்பாவை காலங்களில் - சிறப்பாக பாடுவார். **ஆலய புனருத்தாரண வேலைகளில் கரிசனையுடையவராக திகழ்ந்தார்.** தனது தனிபங்களிப்பாக வசந்த மண்டபம், மடப்பள்ளி என்பவற்றை நிறுவிக் கொடுத்தார். தற்போது புதிய ஆலய அமைப்பு நிறைவேற வேண்டும் எனவும் பல ஆலோசனைகளை எமக்கு கூறியுள்ளார். **மூலஸ்தானத்திற்கும், கோபுரத்திற்கும் அடிக்கல் நாட்டி வைத்தார்.**

**அரசியல் விடயங்களில் ஆழமான அனுபவ அறிவுடையவராக திகழ்ந்தவர்.** சிறு வயது முதல் சிறந்த வாசகனாக இருந்தமையும் பன்னாட்டு - பல்துறை அரசியல் முறைமைகளையும் வரலாறுகளையும் கற்றுணர்ந்தவராக திகழ்ந்தார்.

தமிழர் அரசியலில் தமிழ் அரசுக் கட்சி பற்றுடையவராக திகழ்ந்தார். தேர்தல் காலங்களில் அயல் கிராம மக்களுக்கு தெளிவூட்டல்களுக்காக தனது நண்பர்களுடன் செல்வார்.

**1965, 1971, 1977 களில் தேர்தல்களில் விழிப்பூட்டுனராக செயற்பட்டார். 1965ம் ஆண்டுத் தேர்தலில் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி, இதில் முகம்மது அலி என்பவர் தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பள்ளிக்குடியிருப்பில் வரவேற்பு நடைபெற்றது. "மூதூர் முதல்வா வருக முகம்மது அலியே வருக என வரவேற்பு பா எழுதி திரு கணேசமூர்த்தியை பாட வைத்தவர். மூதூர் மைதானத்தில் 1977 இல் இறுதி தேர்தல் பிரசார கூட்டத்தில் வண்ணை ஆனந்தன், காசியானந்தன், முதலான பிரச்சார பேச்சாளர்களுடன் கனகரெட்ணம் அவர்களும் சிறந்த மேடைப் பேச்சாளராக அந்த மேடையிலே - தமிழர் வரலாறு, எல்லாள மன்னனனின் 40 ஆண்டுகால ஆட்சி பற்றியெல்லாம் சிறப்பாக பேச பெரும் கரகோச வரவேற்பும் கிடைத்தது. தொடர்ந்தும், தமிழர் விடிவுக்கான போராட்ட வரலாறுகளிலும் ஆதரவாளராகவே அனைவரும் இருக்க வேண்டியேற்பட்டது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிராமத்தின் சம்பிரதாயமான ஒற்றுமையான பல நிகழ்வுகளில்** (1970களின் முன்பு) - வீடுகட்டுதல் - அதற்கான சல்லிசுடுதல், கம்புதடிகள், வெட்டுதல் - முதலான பல நிகழ்வுகளிலும் முக்கிய பங்குதாரியாக சமையற்காரராகவும் செயற்பட்டவர்.

யுத்தகாலத்தில் கிராமம் எரிக்கப்பட்டு ஊரைவிட்டு வெளியேறிய பலதடவைகளில் மீண்டும் முதல் வந்து குடியேறுவார். தொடர்ந்து ஏனையோர் குடியேறுவர்.

**சிறந்த விவசாயி** - விவசாய நடவடிக்கைகள் அனைத்தையும் செய்யும் தொழில்திறன் மிக்கவராகத் திகழ்ந்தவர். மாட்டுப்பட்டி - நெற்செய்கை - முதலான விவசாய நடிவடிக்கைகளில் சிறப்பாக செயற்பட்டவர்.

**எமக்கு ஏதாவது கூறினால் - மறுப்புக்கோ இரண்டாம் பேச்சுக்கோ எம்மில் இடமில்லை. சிறப்பாக நீண்டகால பயனுடையதாக சரியானதாகவே இருக்கும். சிறப்பான வழிநடத்தல்.**

**பதவிகளுக்கு ஆசைப்பட்டதோ** - பதவிகளுக்கான போட்டியாளர்களுடன் இணைவதோ இவரிடம் இல்லை. தன்னால் முடிந்த பணிகளை கிராமத்திற்காக செய்தார். எம்மையும் நல்லதை செய்ய வேண்டும் என ஊக்கப்படுத்தினார்.

**எனது பள்ளிக்குடியிருப்பு வரலாற்றுப் பார்வை நூல் வெளியீட்டில் முதன்மை அழைப்பாளராக முதல் பிரதியையும் வாங்கி கௌரவித்தார். ஏனைய புத்தக வெளியீடுகளுக்கும் திருகோணமலை வாழைச் சேனைக்கும் வந்து மகிழ்ந்தார்.**

**உண்மை, நேர்மை, நல்லெண்ணம், நல்ல விழுமிய பண்பாடுகளுடையோராய் வெள்ளை வேட்டி - சேட்டுடன் காந்திய வாழ்வியலை பின்பற்றியவராக எண்பத்தொரு வயது வரை சிறப்பான வாழ்வியலை நிறைவு செய்து இறுதிக்காலம் வரை சிறப்பாக நடமாடினார். பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிளைகள் சகோதரர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரின் அன்பு பாசப்பரிமாறல்களுடன்.....

இறுதிநாளில் மட்டக்களப்பு, கிரான், திருகோணமலையிலிருந்தும் உறவுகள் - சகோதரங்கள் அனைவரையும் உணர்வுடன் கலங்க இமைமூடா நேரிய பார்வையுடன் என் கையைப் பிடித்து தனது நெஞ்சில் வைத்தும் மறு கையால் கையசைத்து... அமைதியாக படிப்படியாக சுவாசிப்பதை நிறுத்தி - இவ்வுலகை விட்டு நீங்கிய நிகழ்வு என்றும் நினைவில்...

"பெரியப்பாவின் வாழ்வியல் பெரிய பாடப் புத்தகம்" - 'பிரசாந்'

## பள்ளிக்குடியிருப்பு பற்றிய அவரது வரிகள்...

பள்ளிக்குடியிருப்பு பல்துலங்கு மருதநிலம்
வான் பொய்பினும் தான் பொய்யா மாவலி பாயும் நிலம்
ஏருழவும் எருதுகளும் எருமைகளும் நிறைந்த நிலம்
சென்நெல்லும் சேர்ந்துள்ள பயிர்களும் திரண்ட நிலம்
பால் பொழியும் பட்டிகளுள்ள நிலம்
பாட்டாளிகளின் கூட்டாளியான நிலம்
தேனினுமினிய செந்தமிழர் வாழும் நிமை
சித்தி விநாயகனின் திருஷ்டியில் அமைந்த நிலம்

ஆறுமுகம் - செல்வநாயகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரம் தாழ்த்திய அஞ்சலிகள்

பழம் பெருமை மிக்க பதியூர்
பள்ளிக்குடியிருப்பின்மூத்த
குடி ஒன்றின் "முதுசொம்" தன்
இகலோக வாழ்வை இனிதாய்
நிறைவு செய்து பரலோக வாழ்வுக்காய்
பயணமதை தொடங்கியது

கறைபடியா மனம்போல
கறைபடியா வெள்ளை உடை
அதற்கேற்ற வெண்பற்கள்
வெண்பற்கள் தெரிய
குறுநகைபோல் புன்சிரிப்பு
நிலம் நோகா ஆனாலும்
நிலம் மகிழும் சிறியநடை
எவர் மனமும் நோகா
இதமான பேச்சு
தன்வயதொத்தவரிடம் போடும்
ததிங்கிணத்தோம் தாளங்கள்
இத்தனைக்கும் ஒத்தபெயர்
ஆறுமுகம் கனகரெட்ணம் ஐயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்குடியிருப்பின்
கல்விக்கண்ணை
ஆழ அகலத் திறந்த கலங்கரைவிளக்கு
எம்மூரின் கல்வி விடியலுக்கு
பிள்ளையார் சுழியிட்ட முதல்மகன்
பெருமகனும் கூட ஏன்
எம்மூரின் காந்திமகானும் அவரேதான்

அன்றைய சுருங்கிய பள்ளிக்குடியிருப்பை
இன்றைய அகண்ட பள்ளிக்குடியிருப்பை
பலரது பக்குவமீறலுக்கு மத்தியிலும்
பக்குவம் குலையாமல்
பள்ளிக்குடியிருப்பின் பழம்பெருமை
காத்த மூத்த பண்பாளன்

தமிழ்த் தேசிய அரசியலிலும்
தன்னை கீகாட்டாது
தமிழ்த் தேசியத்தை வளர்த்த மகான்
போராட்டகாலத்திலும் அதனை
பின்னிருந்து உந்தியவர் நீங்கள்
இதனை நாமறிவோம் நன்கு

பள்ளிக்குடியிருப்பு அ த க பாடசாலை
பள்ளிக்குடியிருப்பு இந்துக்கல்லூரி
என்ற நீண்ட வளர்ச்சிக்கு
நீங்கள் விதையிட்டீர் இன்று
நாங்கள் அறுவடை செய்கின்றோம்
எம்மூரின் கல்வி
ஐந்தாம் வகுப்போடு நின்றதொருகாலம்
இன்று அது பட்டப்பின்படிப்பு வரை செல்ல
தூண்டாமணிவிளக்காய்
பின்னிருந்து தூண்டியதும் நாம் அறிவோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மூரின்
கல்வியென்ன கலையென்ன
கலாசாரமென்ன விளையாட்டென்ன
பொதுநலன் என்ன
தமிழ் நலன் என்ன
எல்லாத்துறைகளிலும்
எம்மூர் எழுந்து நிற்க
முன்னால் இருந்து
முதற்பணிகள் ஏற்றியதும்
நாம் அறிவோம்
எப்படி எத்தனை கூறிடினும்
அப்படி அவர்புகழ் கூறிடலாமோ

உறவில் எனக்கு மூத்த அத்தான்
அப்படி அவரை அழைத்ததில்லை
ஐயா என்றே அழைப்பேன் நான்
அதுவே என்றும் நான்
அவருக்குத் தரும் மரியாதை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
நல் வாழ்க்கைதுணை கண்டு
நன் மக்கள் பேறுகண்டு
நற் பேராண்டிகள் கண்டு
இன்று வானுறையும் தெய்வமாகிய
உங்களை வாழ்த்த வயதில்லை எனக்கு
ஆதலால் வணங்கி
விடைதருகிறேன் ஐயா
(மூத்த அத்தான்)

சட்டத்தரணி கந்தையா தவராஜா
பள்ளிக்குடியிருப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாற்றல் பெற்றவர்

## அமரர். ஆறுமுகம் கனகரெட்ணம் அவர்கள்

திருகோணமலை மாவட்டத்தில் திருக்கோணேசரின் ஆலயத் திருப்பணிகளுக்காக பூபாலன் என்னும் குளக்கோட்டு மன்னன் இந்தியாவிலிருந்து பல குடிமக்களை வரவழைத்து குடியமர்த்தி அவ்வவ் இடங்களுக்கு ஊர்ப் பெயரிட்டான். கொட்டியாபுரப்பற்றில் குடியமர்த்திய பழம்பெரும் கிராமங்கள் உள்ளன. இதில் கிழக்கே மக்கள், பள்ளி கொண்ட (அமர்ந்த) இடமே பள்ளிக்குடியிருப்பு என்னும் காரணப்பெயரானது.

இக்கிராமத்தின் உயர்குடி வேளாளர் மரபில் சரவணமுத்து ஆறுமுகம் வேலுப்பிள்ளை தங்கப்பிள்ளை தம்பதிகளுக்கு மூத்த மகனாக அமரர். கனகரெட்ணம் பிறந்தார். இவர் தோற்றமான வேளை பெற்றோர் பல அதிஸ்டங்களைப் பெற்றனர். காணி பூமி மற்றும் வளங்கள் மாடு கன்று போன்றன பெருகியது. தொடராக குணராசரெட்ணம், தங்கரெட்ணம், துரைநாயகம், செல்வநாயகம், நேசதுரை. நவநாயகம் ஆகிய அறிவான பிள்ளைகள் பிறந்தனர். இவர்கள் அனைவருடனும் அமரர் அன்பாகவும் பாசத்துடனும் சேர்ந்து வாழ்ந்தார். இவர் பள்ளிப்பருவம் எய்தியதும் அன்னார் ஆறுமுகமும் மைத்துனியும் உயர்கல்வி புகட்ட அரும்பாடுபட்டு மூதூரில் உள்ள புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் சேர்த்தனர். இவர் தங்கிப் படிப்பதற்காக கோபால் மாஸ்டர் வீட்டைத் தேர்ந்தெடுத்தனர். இவ் ஆசிரியரும் பிள்ளைகளும் ஆங்கில அறிவு சார்ந்த குடும்பமாகும். இது அடிப்படை ஆங்கில அறிவிற்கு வாய்ப்பானது. அத்தருணம் நான் அப்பாடசாலையில் 6ம் தரத்தில் கல்வி கற்றேன். அமரர் கனகரெட்ணம் சிறு வகுப்பில் இருந்தார். இவர் அண்ணர் மகன் என்பதை அறிந்து அணுகி உறவாடுவேன். அவரும் அண்ணா என அழைத்து அன்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துவார். சுருட்டை முடி மெலிந்த தேகம், குறைந்த உயரம், அமைதியான பயந்த சுபாவம் உள்ளவர். வகுப்பு மாணவர்கள் இவரை வட்டுக்கோட்டை எனப் பகிடி பண்ணுவர். என்னிடம் முறையிட வருவார். நான் சென்று அவர்களைக் கண்டித்ததும் உண்டு.

அமைதி, ஒழுக்கம், பயந்த சுபாவம் உள்ளவர். இருந்த வீட்டார், பாடசாலை ஆசிரியர்கள் இவர் மீது விருப்பம் அன்பு காட்டுவர். வகுப்பில் நல்ல கெட்டித்தனம், கீழ்ப்படிவு உள்ளவர். ஆங்கில அடிப்படை அறிவு தானாகவே பெற்றார். கலைவிழா, தமிழ்த்தின விழா போன்ற நிகழ்வில் சிறு சிறு கதைகள், ஆங்கில கவிதைகள் கூறுவார். நான் 08ம் ஆண்டு சித்தியடைந்ததும் எனது தந்தை மட்/சென்மேரிஸ் வித்தியாலயத்தில் சேர்த்தார். இவற்றோடு எங்கள் தொடர்பு முடிந்தது. ஆயினும் அண்ணர் இவரை திருகோணமலை, மட்/வந்தாறுமூலை போன்ற பாடசாலைகளில் கற்க வழி செய்து உயர்கல்வி பெற்றார். தனது தம்பி குணராசரெட்ணம் கல்வி கற்கும் வேளை அண்ணர் அமரத்துவமானார். அன்றிலிருந்து தனது சகோதரரின் கல்வி ஏனைய பணிகளைப் பொறுப்பேற்று தந்தையார் கடமைகளை தானே நிறைவேற்றினார். தனது உயர்வுகளைக் கைவிட்டு குடும்பப் பொறுப்பை ஏற்று வரும் வேளை ஆசிரிய பணி கிட்டியது. சேனையூர் மகா வித்தியாலலயத்தில் ஆசிரியர், பிரதி அதிபராக முழு நேரப் பணிபுரிந்து பெயர்பெற்ற ஆசிரியர் என்ற பெயரோடு அப்பகுதி மக்களின் மனங்களில் பதிவுபெற்றார். திருமணபந்தத்தில் மல்லிகைத் தீவு அத்தான் (தோம்புதர்) செல்லையா மகள் இராசபாக்கியம் இவரை மணம் முடித்து வாசுகி, சுமுகி, தேமுகி, ஆறுமுகதாசன், (அமரர்) ஆறுமுகவரதன் என்னும் செல்வப் புதல்வர்களைப் பெற்று அறிவூட்டி அகமகிழ்ந்து அமரரானார். குடும்பத்தலைவனாக, நல்லாசிரியனாக மாணவர்களுக்கு ஏணியாக, குருவாகப் பணிபுரிந்து ஓய்வுபெற்று அமரரான என் அண்ணர் மகனின் செயற்கரிய செய்கைகளை என்னால் மறக்கமுடியுமா?

**அமரரின் அன்புச் சின்னப்பா**
**இ. தருமலிங்கம்** J.P
**ஓய்வுநிலை அதிபர்**
**பாரதிபுரம் கிளிவெட்டி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி!

1. தெய்வீகம் நிறைந்த திருகோணமலையின் தெற்கே
கொட்டியாபுரத்தின் கிழக்கே மாவலியாள் சீறிப்பாய்ந்து
புரண்டு வரம்பு வழிந்தோடும் வயலும், வயல் சார்ந்த
மருத நிலப்பரப்பில் காராளர் பாலாறும், பண்ணையுமாய்
பழம் குடிமக்கள் வாழும் பள்ளிக்குடியிருப்பு பதியே

2. ஊரவர்கள் ஒன்றிணைந்து இல்லறத்தில் நல்லறம் காண
திரு. ஆறுமுகம் (வ.வி) தங்கப்பிள்ளை மணமக்களாக
ஐந்து ஆண்களும் இரண்டு பெண்களையும் இணைத்து
நல்மக்களாகத் தடம் பதித்து வழிகாட்டிச் சென்ற
அமரர்.அண்ணன் கனகரட்ணம் அவர்களே

3. தனது கல்வியில் உயர்வடைவதற்காக
மட்/ வந்தாறுமூலையில் உயர் கல்வி கற்று
எமது ஊரின் முதல் கல்வி மானாகத் தடம் பதித்து
நல் ஆசானாய், அதிபராய் கல்விச் சேவையில்
அனைவராலும் போற்றப் பெரும்தகைப் பெருமையைத்
தட்டிக்கொண்டவர் நீயன்றோ

4. சிறுவயதிலே தந்தையை இழந்து தம்பி தங்கைகளை
நல்வழிகாட்டி சிறந்த கல்வியில் உயர வைத்து
தானும் கல்வியில் உயர்ந்து காசினி போற்றும்
தந்தையாகவும், அண்ணனாகவும் திகழ்ந்தீரே

5. உண்மை, நேர்மை ஒழுக்கம் உயர் பண்பாடு
அனைத்தையும் உள்ளடக்கியதாக சிறந்த வழிகாட்டியாக
நானிலம் போற்றும் நற்பிரஜையாக வாழ்ந்து
வழிகாட்டி வையகம் போற்ற வாழ்ந்து முடித்தீரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உறவு கலந்த மல்லிகைவீசும் மல்லிகைத் தீவில்
மணமகளைத் தேர்ந்தெடுத்து இல்லறவாழ்வில் இணைந்து
ஐவரை நலமுடன் பெற்றெடுத்து வளர்த்து கல்வியில் மேம்படுத்தி
குடும்பத்தின் ஒளிவிளக்காய் கோலோச்ச வழிகாட்டி நீரே.

7. கலைமதி விளையாட்டு கழகத்தின் ஆரம்பகர்த்தா நீரே
எங்கள் கழகத்தின் ஆயுட் காலத்தலைவர்
எமையெல்லாம் சிறந்த கீழ்ப்பணிவோடு
கழகத்தை உயரவைத்து ஊருக்குப் பேரெடுத்த பெருந்தகை

8. கலைவாணி கலா மன்றத்தையும் ஆரம்பித்தீர்
அதில் சிறந்த பாடகரும் வீணை வாசிப்பவராகவும் மிளிர்ந்தீர்
மன்றத்தை வழி நடாத்தி பல பேரை பாடகராகவும்
இசைக் கருவிகளையும் மீட்டும் நிலையை உருவாக்கினீர்கள்.

9. கோட்டையை நோக்கிய புறப்பாடு அது
மீளவும் பெற முடியாது திரும்பாது
யார் அழுதாலும் புரண்டாலும் மீளாது
என் செய்வோம் இதற்கு நாமும் விதி விலக்கல்ல

10. அன்பு மனைவி காதலால் கதறக் கண்ணியமாய்
பெற்றெடுத்த கண்மணிகள் கதறி அழ
உற்றார் உறவுகள் கூடி அழ நீ ...
எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்றதேனோ

11. ஊரே கண்ணீரும் கம்பளையுமான காட்சி
நாம் நினைப்பது ஒன்று நடப்பது இன்னொன்று
இந்நிலை இயற்கையின் நியதி இறைவனின் தீர்ப்பு
ஏற்று நடப்பது எல்லோர்க்கும் பொருத்தமே

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகரையும் வெருகலம் பதியானையும் வேண்டுவோமாக.

**கலாபூஷணம். த. சிதம்பரப்பிள்ளை குடும்பம்,**
**ஓய்வுநிலை அதிபர்,**
**பல்துறை வித்தகர், பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்சிமைத் தீபம்

*பழனம் நிறைந்த பழம்பெரும் பதி*
*பழமை போற்றிப் பயின்றிட்ட விதி*
*மழலைகள் மனதிலே மரகத நதி*
*தழலாய்த் தீமைகள் தீய்த்திடும் நீதி*

*இலக்கணம் இவரின்று இலக்கியம் ஆகினார்*
*விலக்கிடும் யாவையும் விலக்கியே வாழ்ந்தார்*
*தலைக்கனம் இல்லாத தலைவராய் ஆனார்*
*மலைக்கும் அளவுக்கு மாண்புற்று மகிழ்ந்தார்*

*கல்விச் செல்வத்தைக் கற்றே தந்தார்*
*அல்லல் போக்கிடும் அறிவே என்றார்*
*நல்லதை மனதில் நிறைத்துக் கொண்டார்*
*பல்லினத் தாருக்கும் பகிர்ந்திடச் செய்தார்*

*ஆறுமுகம் அவர்களின் ஆருயிர்ப் புதல்வன்*
*வீறுடை குணத்தார் விரும்பிய தலைவர்*
*மாறிலாச் செல்வம் மற்றோருக்கும் தனையன்*
*கூறிலாக் குடியூரில் குடிகளின் விதுரர்*

*களகறற் தாரகை காரிருள் நீக்கும்*
*கனக ரெத்தினக்கலம் கரை சேர்க்கும்*
*மனது நிறைந்துறை மாட்சிமைத் தீபம்*
*எனக்கும் உமக்குமாய் என்றுமே ஒளிரும்*

**சித்திரகேசரி - திரு. சி. கணேஸ்**
**அதிபர் - தி/மு/மல்லிகைத்தீவு ம.வி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறவாத கனகர்

அமரர். திரு. ஆ. கனகரெட்ணம் அவர்களும், நானும் ஆலங்கேணியையைச் சேர்ந்த அமரர். திரு. க. கோணாமலை அவர்களும், சேனையூரைச் சேர்ந்த மனோன்மணி, குமரேசு அவர்களும், தி/நல்லூர் அ.த.க வித்தியாலயத்தில் ஒன்றாகக் கற்பித்தவர்கள். அமரர். கனகரெட்ணம் அவர்களை இதற்கு முன்பே எனக்கு நன்கு தெரியும். 1960 முதல் 1962 வரை நல்லூரில் ஒன்றாகக் கற்பித்து 1963 - 1964 இரு வருடாங்களும் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறியவர்கள்.

**நல்லூரில் கற்பிக்கும் போது, இவரை ஒரு பக்குவமுள்ள மனிதராகவே நான் கண்டேன். பொறுப்புள்ளவராக, மற்றவரைப் பற்றி குறை சொல்லுவதோ, மற்றவரிடம் குறை காண்பதோ, எரிச்சல், பொறாமை கொள்ளுவதோ ஆகிய தீய பண்புகளோ இவரிடம் அறவே கிடையாது. மற்றவரிடம் குறை காணாது நிறைவையே காண்பார்.**

அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொள்ள மறுத்து, நின்ற இளையவராகிய என்மீது அதிபர் பதவியைச் சுமத்தினாலும், யார் அதிபர் என்று மற்றவர்களுக்குத் தெரியாத வகையில் தான் நாங்கள் பழகினோம். கடமையைச் செய்தோம். கற்பித்தலை நிறைவேற்றினோம்.

மாரிகாலங்களில் சேறும் சகதியுமாயுள்ள மணல், களிமண் பாதையில் தினமும் பயணிக்க முடியாததால் ஒரு வீட்டில் தங்கியிருந்தோம். அக்காலங்களில் சமையல் பொறுப்பை அமரர் அவர்களே ஏற்றுக்கொண்டார். சமையலுக்கு வேண்டிய முன்னாயத்தங்களை நாம் செய்து கொடுப்போம். மனம் சலியாது சமைப்பார். உருசியாகச் சமைப்பார். நல்லூர் வில்லு, பனையானும், வராலும், கயல் மீனும் சமைத்தால் அதன் உருசியைச் சொல்லமுடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு காட்டுக் கீரைகளான முல்லை, முசுட்டை, காரை, கானாந்தி ஆரை - அதன் உருசியோ வேறு. அமரர் அவர்களுக்கோ நளபரிபாகம் கை வந்த கலை. இதை உயிருள்ள வரையும் மறக்க முடியுமா? சமையலறையில் ஒரு தாயாகவே மிளிர்ந்தார். சமைத்து முடிந்ததும் வாருங்கள் வாருங்கள் என ஒரு கூப்பிடல் கேட்கும். நாங்கள் கோப்பையைக் கழுவிக்கொண்டு அருகில் அமர்ந்து கொள்வோம். எவ்வளவு அருமையான காலம். இனிமையான பொழுது வாழ்வில் வருமா? நெஞ்சமோ ஏங்கிக் கனக்கிறது.

ஆசிரிய பயிற்சியின் போது ஒரு பக்குவமுள்ள ஆசிரியராகவே அவரைக் கண்டேன். ஒரு "சிறந்த ஆசிரியன் பிறக்கும்போதே சிறந்த ஆசிரியனாகவே பிறக்கிறான்" என்ற உளநூல் வார்த்தைக்கு இணங்க, இவர் அவ்வாறே காணப்பட்டார். தன்பாடும் தானும்: தன்பாட்டில் படிப்பறையில் இருந்து படிப்பார். சில வேளைகளில் மட்டும் நண்பர்கள் சிலரோடு அரட்டை அடிப்பார். என்னோடு எந்த வித பகிடியும் வைக்க மாட்டார். மரியாதையோடு விபுணர் என்றே அழைப்பார்.

ஒரு சிறந்த ஆசிரியராகவும், சிறந்த விளையாட்டு வீரராகவும், சிறந்த பாடகனாகவும், விளங்கிய இவர் ஆசிரிய கலாசாலையை விட்டு வெளியேறிய பின்னர் கற்பித்த பாடசாலைகளில் ஒரு தனித்துவமான ஆசிரியராகவும், சமூகத்தால் மதிக்கப்பட்டவராகவும் அன்றும் மதிக்கப்பட்டார். இன்றும் மதிக்கப்பட்டுப் பேசப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்.

எங்களை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். வேதனைத்தீயை மூட்டிச் சென்று விட்டார். அவர் பிரிந்தாலும், என்றும் என் நெஞ்சில் நிறைந்த ஒரு புனித மாமனிதராகவேயிருப்பார். அவரது ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக் கொண்டே இருப்பேன்.

என்றும் நினைவுடன்

**சைவப்புலவர் செ. விபுணசேகரம்**

**முதற் பாடசாலை, ஆசிரிய கலாசாலை**

**உற்ற தோழர்**

**ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்**

**கட்டைபறிச்சான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் அஞ்சலி

*பள்ளிக்குடியிருப்பின் பெருமைகளில் ஒன்றானாய்*
*சொல்லிக் கொடுக்கும் நல்லாசானாய் நீயானாய்*
*வல்ல தமிழ் வாசிப்பின் நாயகன் நீ*
*கல்லில் எழுத்து உன் கண் சிமிட்டும் அச் சிரிப்பு*

*தமிழ்ப் பாடம் கற்பிப்பதில் தன்னிகரில்லா ஆசான்*
*அலுவலகக் கடமைகளில் ஆற்றல் மிகு வல்லாளன்*
*கதைகள் நீ சொன்னாயானால் கட்டிப்போடும் உந்தன் திறன்*
*விதைகள் இட்டுச் சென்றுள்ளாய் வெறும் கனவல்ல உன் வாழ்வு*

*சேனையூர் மத்திய கல்லூரி சிறந்திட நீ உரம் இட்டாய்*
*வானை நிகர் பெருமையெல்லாம் எம் கல்லூரி கண்டதுவே*
*அமைதி அடக்கம் ஆர்ப்பரிப்பு எல்லாம் உன்னில் கண்டோம்*
*விளையாட்டில் வல்லவன் நீ வெற்றிகள் பல கண்டவன் நீ*

*நினைத்துப் பார்க்கிறோம் நெடுக நெடுக*
*வடுகெடுத்த வடிவான தலை அழகு*
*கடுகடுப்பில்லாத களங்கமில்லா புன்னகை*
*தடுமாற்றம் இல்லாத தமிழ் வல்லோன்*

பால. சுகுமார்
மேனாள் பேராசிரியர்
சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் திருடிய பொக்கிஷமே!

வார்த்தைகளின் சுவையால்

வாழ்வெல்லாம் விருந்தளித்தாய்

காணும் பொழுதிலெல்லாம்

கடவுளைப் போல் கருணை ஈந்தாய்

தேவை நீ என்று தேவைகள்

தேடி அலைகையிலே ...

பாதை மாற்றி நீர் பரலோகம் சென்றதேனோ?

ஆறடிக்குள் ஆறறிவை அடைகாத்த அனுபவமே!

ஈரடிக்குள் நிதானத்தை

எடுத்து நடக்கும் சரித்திரமே!

உடையையும் உள்ளத்தையும்

தூய்மைக்குப் பரிசளித்து

தூங்கிவிட்ட தூயவரே! - உமை

தீபம் என்றெண்ணித் தீண்டிய தீ

சாபம் பெற்று இங்கே

சாம்பலாகிக் கிடக்கிறது ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காலம் உன்னை இழந்து*

*காலமாகி போனது ...*

*விதியிற்கு மதி இல்லை*

*வீண் பழியைச் சுமக்குது ...*

*மரணம் தன் மடமை எண்ணி - ஊரில்*

*மண்டியிட்டுக் கிடக்கிறது ...*

*மூச்சைக் கடன் வாங்கிய*

*காற்றின் துர்செயலால்*

*கார்முகிலும் அழுகிறது ...*

*மொழியாலே முத்தமிடும் மூத்தவரே*

*முத்திக்கு ஏன் இந்த அவசரமோ?*

*அறிவைப் பிரசவித்த அன்னையே!*

*அனுபவத்தால் அறம் உரைத்த தந்தையே!*

*அறியாமை இருள் களைந்த ஆசானே!*

*வாழ்வாங்கு வாழ்ந்து வானுறைந்த தெய்வமே!*

*இனி ஊருக்கும் உறவிற்கும் நீ தான் குலசாமி ...*

**அன்பு மகள்**
**ம. துஷாந்தினி**
**உதவி அதிபர்**
**தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணல் கனகரிடம் அகிம்சை கண்டேன்

திருகோணமலை மாவட்டத்தின் தென்பகுதியிலே முத்தூர் என அழைக்கப்பட்ட மூதூர் பிரதேசத்திலே மூத்த பதியாம் பள்ளிக்குடியிருப்பிலே சரவணமுத்து ஆறுமுகம் கனகரெட்ணம் ஆவார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை தி/பள்ளிகுடியிருப்பு அ.த.க. பாடசாலையிலும், மூதூர் அந்தனிஸ் மகா வித்தியாலத்திலும், இடைநிலைக் கல்வியை மட்/வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலும் கற்றார். உயர் கல்வி கற்கும் வேளையிலே அன்புத் தந்தையார் உயிர் நீத்தார். "தந்தையோடு கல்வி போகும் என்பதற்கொப்ப தன் உயர் கல்விக்கும் முற்றுப்புள்ளியை வைத்து விட்டுத்தனது தந்தையார் பொறுப்புகளை தலைமேற்கொண்டு குடும்ப பொறுப்பையேற்றுக்கொண்டார். அதேவேளை தனது இளைய சகோதரர்களின் கல்வியிலும் அக்கறையோடு செயற்பட்டார்.

மூதூர் பிரதேசத்தின் பின் தங்கிய பிரதேசத்திலே நியமனம் பெற்று அர்ப்பணிப்போடும் தியாகத்தோடும் செயற்பட்டார். **"ஆசிரியர் பணி அறப்பணி அதற்கு உன்னை அர்ப்பணி" என்பதற்கொப்ப இறுதி வரையிலும் செயற்பட்டார்.** அதேநேரம் தனது இல்லறவாழ்விலும் ஈடுபட்டு அறநெறி பிறழாது வாழ்க்கை நடத்தி நல்ல பிள்ளைகளை பெற்று சந்ததி தழைப்பதற்கு காரணமாக இருந்தார்.

எனக்கும் இவர்களது குடும்பத்தினருக்கும் 1977ம் ஆண்டிலேயே நெருக்கமான உறவும் பாசமும் ஏற்பட்டது. இவரது இளைய சகோதரர் அமரர் திரு. ஆ. குணராஜ ரெட்ணமும் நானும் தி/கிளிவெட்டி மகா வித்தியாலத்தில் ஒன்றாக கடமையாற்றியதால் அந்த நட்பும் பாசமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இவரது சகோதரர்கள் கூட இன்று வரை அன்பும் பாசம் உள்ளவர்களாகவே இருக்கின்றனர்.

நான் அவரைச் சந்தித்து பழகிய உறவாடிய காலம் முதல் அவர் தனது வாழ்க்கை முறையை கடமைகளை சரியான முறையில் மேற்கொண்டு செய்யப்பட்டதைக் கண்டேன். அண்ணல் காந்தியடிகளின் அகிம்சை முறையைக் கண்டேன். சீரான வெள்ளை உடையில் காட்சியளிப்பார். எளிமையான வாழ்க்கை முறையை கடைப்பிடித்தார். கொள்கையில் பற்றுள்ளவராகவும், இலட்சியத்தில் திடமானவராகவும் விழுமியங்களையேற்று அதன்படி செயல்படுபவராகவும், கடமையில் கண்ணியமானவராகவும், சேவையில் அர்ப்பணிப்புள்ளவராகவும் அவரை பாத்திருக்கின்றேன். அனைவரிடமும் அன்பாகவும் அமைதியாகவும் செயற்படும் தன்மையைக் கண்டு இருக்கிறேன். மற்றவர்களை மதித்து நடக்கும் மனிதநேயப் பண்பினைப் பார்த்திருக்கின்றேன்.

இவர் தி/சேனையூர் மத்திய கல்லூரியில் (கடமை) பிரதி அதிபராகக் கடமையாற்றும் போது நானும் இவரது இளைய சகோதரர் அமரர்.ஆ.குணராஜரெட்ணம் அவர்களும் மூதூர் வலயக்கல்வி அலுவலகத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களாகக் கடமையாற்றினோம். நாங்கள் பாடசாலை மேற்பார்வை விடயமாகச் செல்வதுண்டு. நாங்கள் இருவரும் மேற்பார்வையின் போது பாடசாலை ஆவணங்களை பார்வையிடும் போது இவர் சகல ஏற்பாடுகளையும் உதவிகளையும் செய்து தருவார். அந்நேரங்களில் ஆவணத்தில் காணப்படும் சில குறைபாடுகளை எடுத்துக் கூறும் போது அதனை புன்முறுவலோடு ஏற்று பொறுப்பான ஆசிரியர்களை வரவைத்து அவர்களிடம் கூறுமாறு சொல்வார். அவ்வாறே செய்வோம் மேற்பார்வை முடிவுற்ற பின்னர் ஆசிரியர் கூட்டம் வைத்து அவதானித்த விடயங்கள் பற்றி கூறுவோம்.

**அந்த கூட்டத்தில் அவரது கருத்தைக் கூறும் போது "ஆசிரியர்களாகிய நமது கண்களுக்குப் புலப்படாத விடயங்கள் தவறுகள் அதிகாரிகளின் கண்களுக்கு தெரிந்து விடும்". ஆதனால் நாம் பிழைகள் வராதவாறு ஆவணங்களை சரியாக செய்து வைக்க வேண்டும் என அறிவுரை கூறுவார். அவரது அந்த கருத்து என்னை மிகவும் கவர்ந்திருந்தது. அதே நேரம் இன்னொரு விடயம் பற்றியும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூறுவார். "பேரூந்தை செலுத்துகின்ற சாரதியும் நடத்துனரும் பேரூந்தில் பயணிக்கும் போது வீட்டைப்பற்றி நினைக்க கூடாது. அதே போன்று வீட்டில் இருக்கும் போது பேரூந்து பற்றிய நினைவு இருக்கக் கூடாது." அப்படியிருந்தால் வாழ்க்கைப் பயணம் தடம்மாறிப் போகும் போன்ற அறிவான ஆணித்தரமான கருத்துக்களை கூறுவார். அவைகள் இன்றும் என் மனதில் ஆழப்பதிந்து நினைவோடு கவர்ந்து காணப்படுகிறது.**

அன்னாரிடம் நான் கண்ட கற்றுக்கொண்ட பல படிப்பினைகளை பார்த்திருக்கின்றேன். அண்ணல் காந்தியின் அகிம்சை வழியைக் கடைப்பிடித்து இறுதிவரை செயற்பட்ட கர்ம வீரராகவே அவரைக் காண்கின்றேன்.

- கடமையில் கண்ணியமாகவும் கட்டுப்பாட்டுடன் செயற்பட்டமை.
- ஒப்படைக்கும் பொறுப்பக்களை உரிய முறைப்படி செய்தமை.
- நேரத்திற்கு மதிப்பும் முன்னுரிமையும் கொடுத்து செயற்பட்டமை.
- மற்றவர்களின் நல்வாழ்விற்காக தன்னை அர்ப்பணித்தமை.
- தன்னை அறிந்ததால் தனக்கு ஏற்பட்ட துன்பங்களை தவிர்த்தமை.
- பொறுமையிருந்ததால் எதையும் சாதிக்கும் வல்லமையிருந்தமை.
- பெற்றோர்களின் நிகழ்காலமே பிள்ளைகளின் எதிர்காலம் என்பதை உணர்ந்து செயற்பட்டமை.
- தன் கொள்கையில் ஈடுபாடோடு இருந்தமை.

இவ்வாறாக தனது வாழ்வில் கல்வி, சமூகம், சமயம் என பல துறைகளிலும் செயற்பட்டவர். இவரது வாழ்வியல் முறை எதிர்கால சந்ததியினருக்கு படிப்பினையாகும். **"கடமையைச் செய் பலனை எதிர்பாராதே"** என்ற கீதையின் உபதேசத்தை கடைப்பிடித்த அவரது ஆன்மா சாந்தி பெற்று இறைபதம் சேர பிராத்திப்போமாக!

**கலைமாறன் செ. லோகராசா**
**முன்னாள் பிரதிக் கல்வி பணிப்பாளர்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்**
**பாலத்தடிச்சேனை தோப்பூர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவளக்கலைஞர்

பச்சைப்பசேல் எனக்காட்சி தரும்
பழனங்கள் நிறைந்த
பிரம்புவெளி எனப் பெயர்கொண்ட
வயல் சூழ் கிராமமாம்
பள்ளிக் குடியிருப்பில்
அன்பு கொண்ட மனமும்
பண்பாடும் நிறைந்து
அயல் கிராமங்களோடும்
அதிகம் தொடர்புடையயோராய்
அறிவு மிகு மக்கள் வாழ்கின்ற சூழலில்
அறிவூட்டும் தந்தை ஆறுமுகம் ஐயாவுக்கும்
தங்க மனம் கொண்ட அருமைத்தாய்
தங்கப்பிள்ளை அம்மாவுக்கும்
தரணி போற்றப் பிறந்தவர்
கல்வி ஒளி வீசும் கனகரத்தினம் ஐயா
கனகம் என்றால் தங்கமாகும்
ரத்தினம் என்றால் ரத்தினந்தான்
மண்ணில் பிறந்த மனிதனுக்கு
மன வளம் ஒன்றே மிகப்பெரும் வளம்
என வாழ் வாங்கு வாழ்ந்தவர்
மனம் நிறை மாண்பினர்
மன வளக் கலைஞர்
அறிவும் உணர்வும் கொண்டு
உத்தமராய் வாழ்ந்த ஒரு பெருந்தகை
பிறப்பில் இவர் மாதிரி மனிதன்
கட்டைபறிச்சான் கற்பக விநாயகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் அன்றிருந்த
கரப்பந்தாட்ட விளையாட்டரங்கில்
கலைமதி விளையாட்டுக்கழக அணியில்
தலைவராய் நின்று
கரப்பந்தாடிய நினைவு
எம்மனம் விட்டு என்றும் நீங்காது
எழுபத்தைந்தாம் ஆண்டின் பின்னே
சேனையூர் மத்திய கல்லூரி
சிறப்படைந்த வேளையிலே
கனகரத்தினம் ஐயா
கடமையாற்றினார் அங்கே
அது ஒரு பொற்காலம்
குளங்கோட்டன் இல்லத்தின்
முதல், இல்ல ஆசிரியர்
மாணவர் உள்ளம் வென்ற
ஒரு நல்ல ஆசிரியர்
ஆசிரியராய் பிரதி அதிபராய்
சக ஆசிரியரோடு ஒற்றுமை உடையராய்
ஒரு குடும்பம்போல ஒன்றுபட்டிருந்தார்.

ஏறக்குறைய இருபதாண்டுக்குமேல்
சேனையூரில் சேவையாற்றினார்.
கற்பித்தல் கடமையைக்
கண்ணியமாய்ச் செய்தார்.
பாடக் குறிப்பின்றிப்
பாடசாலை சென்றதில்லை
ஆசிரியத்துவத்தில் அவர் ஒரு
தனி ரகம்.
பழக நல்ல பண்பாளன்
நல்ல மனிதருக்கு இவர்
உள்ளம் நிறைந்தவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல் கிராம நிகழ்வுகளில்
அவருக்கு அழைப்பு அதிகம்
அவற்றை ஏற்றுச் செல்வதில்
ஒப்பில்லா மதிப்பாளன்
விளையாட்டுப் போட்டிகளில்
நல்லநடுவராய் கண்டோம்.
விளங்கும் இன்தமிழ்பேச்சில்
ஒரு ரகமாய்க் கண்டோம்
வன் செயல் தலைதூக்கிய
நின்மதி இல்லாக் காலத்தில்
சேனையூர் மத்திய கல்லூரி
ஆசிரியர் விடுதியில்
ஆறுமுகம் கனகரத்தினம்
ஆசிரியர் அவர்கள்
ஆர்த்தஅன்புடைய பாரியாருடனே
வாசுசி, சுமுகி, தேமுகி
ஆறுமுக தாஸ் ஆறுமுகவரதன்
என்ற பிள்ளையும்
கோகிலா, கமலினி என்ற இரு
குழந்தைகளையும்
ஒரு மனதாக வளர்த்துத்
கல்வியூட்டக் கண்டோம்.
சொந்த ஊருக்கு மீண்டு வந்த பின்பும்
கெடுபிடிகள் மலிந்த காலத்தில்
சேறும் சகதியும் நிறைந்த
நெடு வீதி கடந்து
சேனையூர் மத்திய கல்லூரி வந்து
கடமையில் திளைத்தார்.
பாதை எப்படி என்று
இவர் நண்பர் துரை கேட்டால்
மிக நன்று என்று
மன நிறைவோடு கூறும்
திருப்தியாளர் கனகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரை, கனகர் என்பன
பரிமாறும் வார்த்தைகள்
துரை ரத்தின சிங்கமும்
கனக ரத்தினமும் நிறைவான நண்பர்கள்.
நேர் மறை மனதிற்கு
இவர் ஓர் உதாரணம்.
வாசிப்பதால் இவர் சிவா என்று வாழ்ந்தார்.

நூலக வாசிப்பில் நுண்ணறிவாளன்.
அன்பிற்கும் பண்பிற்கும்
வசிப்பிடமாய் வாழ்ந்தவர் .
தோன்றுவதும் மறைவதும்.
உலக நியதி
இவ்விரண்டின் இடை வாழ்க்கை
நீர்க்குமிழி நிலையின்மை
தற்காலிக வாழ்க்கையை
தரணியில் மனம் கொண்டு
எண்ணத்தைச் சுத்தமாக்கி
என்றும் வைப்பவன்
மனிதரில் மாணிக்கம்
மாண்புள்ள மனிதர்கள்
சமநோக்கு உடையவர்கள்
எல்லோருக்கும் ஒரு நாள்
முடிவுண்டு என்றெண்ணி
ஆணவம் அற்று அவன் அடி இறைஞ்சி
கனவானாய் மறைந்த
கனகரத்தினம் ஐயாவின்
ஆன்மா சாந்திக்காய்
ஐங்கரனை வேண்டி நிற்போம்.

நன்றி.

திரு. க. பழனிவேல்
ஓய்வுநிலை ஆசிரியர்
கட்டைப்பறிச்சான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தமம் அடையா ஆதவன் அவர் !

முதலில் நமக்கெல்லாம் தொட்டிலடா!
கண்மூடினால்காலில்லா கட்டிலடா!
என ஒரு கவிஞன் பாடிவைத்தான். தொட்டிலில் தொடங்கி கட்டிலில் நிறைவேறும் இந்த மானிட வாழ்வில் தொட்டிலுக்கும் கட்டிலுக்கும் இடையே நடக்கும் வாழ்வியல் நாடகம் தான் எம் வரலாற்றை பதித்து வைக்கும்.

அந்த வாழ்வியலை அர்த்தத்தோடு நிறைவாக வாழ்ந்து நிறைபேறு பெற்று மறைந்தவர் கனகரெட்ணம் ஐயா என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனக்கு மிக நெருங்கிய அத்தான் முறை என்றாலும், அவரை அத்தான் என விழிப்பதை விட ஐயா என கௌரவ மிக்க தொனியில் அழைப்பது சாலச்சிறப்பென எண்ணுகிறேன்.

ஒரு மனிதன் வாழ்ந்து மடிந்த காலங்களை பலவாறாக பிரிக்கலாம் அதில் கனகரெட்ணம் ஐயா அவர்களின் வாழ்வியலை அதிக பாகங்காளக பிரிக்க எனக்கு அறிவு போதாமையால் சில பாகங்களாக பிரித்து ஆய்வது பொருத்தம் என எண்ணுகிறேன்.

- மானிட பண்பாடும் நடத்தையையும், உண்மை யதார்த்த வாழ்வியலை அத்தியாயங்களாக கொண்டு வாழ்ந்தவர்.
- அர்த்தமுள்ள வாழ்வியலை தன் குடும்ப ஒழுங்குபடுத்தலில் முன்னோடியாக வாழ்ந்தார்.
- அவரது வாழ்வியல் இருப்பவர்க்கு கற்றுத் தந்த பாடங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிட பண்பாடும் நடத்தையும்

ஒரு மனிதன் உலகில் அவதரித்து விட்டால், அவன் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும். நன்னூல்களும் கூறிச்சென்றுள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களையும் படித்தவர்கள் பலருண்டு. ஐயாவும் கற்றுக்கொண்டவர்களில் ஒருவர். ஆனால் ஏனையவற்றிலிருந்து சற்று வேறுபடக் காரணம் யாதெனில் எதைக் கற்றுக்கொண்டாரோ, அவற்றை தன் வாழ்வியலில் பிரதியிட்டு வாழ்ந்தவர் என்ற பெருமைக்குரியவர். ஒரு மனிதனுக்கு ஏற்படும் பலவிதமான பலவீன எண்ணங்கள் யாவற்றையும் தனது ஐம்பொறி என்ற அங்குசத்தால் கட்டி வைத்து அவர் இல்லற வாழ்க்கை வாழ்ந்தவர்.

தான் பணியாற்றிய தொழிலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் சாதாரண நியாயமான ஆசைகளை எல்லாம் புதைத்துவிட்டு வாழ்ந்தவர். இதுபற்றி மறைந்த அமரர் கதிர்காமத்தம்பி ஐயா, மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அமரர். க. துரைரெட்ணசிங்கம் ஐயா அவர்கள் மூலம் கூறக்கேள்விப்பட்டேன். அவரின் தொழிலிடமான பாடசாலையில் கனகரெட்ணம் ஐயாவின் நடவடிக்கைகள் ஆச்சரியமூட்டின.

நேரம் தவறாமை, மாணவர் ஒழுக்கம், ஒழுங்கு, பிரச்சனைகளுக்கான தீர்வு, மாணவர்களின் கற்றலில் கொண்ட ஈடுபாடு போன்றவைகளுடன், ஒரு அதிபராக வேண்டும் என்ற பேரவா, அதுவும், சகல திறமையும் , தகுதியும் இருந்து அதை நிராகரிப்பது என்பது இலகுவானதல்ல என எண்ணுகிறேன்.

மேலும், கற்ற மாணவர்களில் சிலர் இன்றுவரை அவரை நினைவுகூர்வதை எண்ணி உவகையடைகிறேன். குறிப்பாக இன்றும் வாழும் சாட்சியாக உள்ள கனகரெட்ணம் ஐயாவின் மாணவனான திரு. கதிர் திருச்செல்வம் அண்மையில், உரையாடும்போது தன் உயர்ச்சிக்கு காரணமும் ஐயாதான் என பெருமையாக கூறியதையும் மாணவர்களுடன் அன்பாக பழகுவதையும் ஒரு சிறு உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். இப்படி பலரை ஆளாக்கியுள்ளார். கடமை முடிந்து ஆசிரியர்கள் யாவரும் சென்றாலும் முழுமையாக பாடசாலையில் நின்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் ஏனைய கடமைகள் யாவற்றையும் முடித்துவிட்டு, மறுநாளுக்குரிய பணிகளையும் நிறைவேற்றிவிட்டு சென்றதை தான் பார்த்தாகவும் திருச்செல்வம் அவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். கடைசி மணி அடிப்பதை எப்போது என எதிர்பார்த்திருக்கும் மாணவர்களை விட அதிக ஆர்வம் காட்டும் ஆசிரியர்கள் நிறைந்த இக்காலத்தில் கனகரெட்ணம் ஐயா போன்று இருக்கும் ஆசிரியர் கோடியில் ஒன்று எனலாம்.

மனசாட்சியும், கடமையுணர்வும் ஒரு புள்ளியல் சந்தித்தாலன்றி இது சாத்தியமாகாது என்பது உண்மையாகும்.

இன்னுமொரு குறித்துரைக்கப்படவேண்டிய விடயம் யாதெனில், காந்திக்கு கதர் உடை எத்தனை சிறப்போ அது போன்று இவரின் தூய்மையான வெள்ளை உடையும், மரணிக்கும் வரை பாதரட்சையை அறியா பாதங்களும், தன் பயணத்திற்கான துவிச்சக்கர வண்டியும்தான் அவருக்கான சிறப்பான அடையாளங்கள். ஒரு கொள்கையோடு வாழ்க்கைப் பயணம் மேற்கொண்டவர். எளிமையும், தேவையற்ற ஆடம்பரங்களையும் முற்றாக ஒதுக்கி வாழ்ந்தவர். இப்படியாக ஏராளமாக அவரைப்பற்றி அடுக்கிக்கொண்டே போகலாம்.

## அர்த்தமுள்ள வாழ்வியலை குடும்பத்தோடு இணைத்துக்கொண்டவர்.

ஊருக்குத்தான் உபதேசம்!

உனக்கில்லையடி! என்று வாழும் மானிட சமூகத்திற்கிடையே தனித்து நின்று தனது கொள்கைகளையும் இலட்சியங்களையும் மாற்றாது தன் குடும்பத்திலேயும் பிரதியிட்டு வாழ்ந்தவர்.

நிறைந்த உலக கல்வி! நிறைந்த பண்பாட்டுக் கல்வி! நிறைந்த யதார்த்த கோட்பாடு! நிறைந்த இலச்சிய கொள்கை! இவை அனைத்தையும் தன் குடும்பத்தினுள் செலுத்தி தன் பிள்ளைகளையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சகோதரங்களையும் பண்பாளர்களாக்கி உயர்ந்த இடத்தில் அமர்த்தி அழகு பார்த்தவர்! அவரின் இலட்சியக் கனவிற்கு தன் மகனையும் பறிகொடுத்தமையும் அதனைப்பற்றி மரணிக்கும் வரை அதற்கான சமூக உயர்ச்சியையும் நோக்காதவர். இப்படி பலவற்றைக் கூறலாம்.

## கற்றுத்தந்த பாடங்கள்

மிகத்தெளிவாகக் கூறுகிறேன்!

இந்த நூற்றாண்டில் நெறியோடு வாழ்நதவர்களில் சிறப்பாக சிலரை தெரிவு செய்வதனால், வாழ்ந்து காட்டி வழிகாட்டியாக இருக்கும் அமரர் கனகரெட்ணம் ஐயா அவர்களை முதன்மையாக தெரிவு செய்யலாம்.

**இவரின் வாழ்வியலை அல்லது அவரின் சுயசரிதையை நூலாக்கி எம்மக்கிடையே ஒரு வாழ்வியல் படிப்பினைப் புத்தகமாக வெளியிடவேண்டும் என்பது காலத்தின் தேவையாகும்!**

சீர்கெட்டு நிலைகுலைந்திருக்கும் எம் சமூகமிடையே இப்படியும் ஒருவர் வாழ்ந்து மறைந்தார் என்ற வரலாறு வெளியாக வேண்டும். குடும்ப நெறிப்படுத்துகை, தொழில் தர்மம், சகோதர வழிகாட்டல், நட்பு பேணுதல், களிப்பாக வாழ்தல், நிறை தமிழ் அறிவோடு வாழ்தல் போன்ற பல விடயங்கள் அவரைப்பற்றி உள்ளடங்கிய யதார்த்த நூலாக வெளிவரல் வேண்டும் என நினைக்கின்றேன்! ஏனெனில் ஐயா அவர்களின் மறைவு ஒரு இனத்தின் மறைவு!, எம் இனத்திற்கான வாழ்வியல் வழிகாட்டல் நூலாக நிச்சயம் அமையும் என்பதில் முழுமையான நம்பிக்கை கொள்கிறேன்.

நிறை மொழி மாந்தர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டி விடும் (குறள் 28)

**கனகசபை தேவகடாட்சம்**
**மல்லிகைத்தீவு - திருகோணமலை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புறும் மானுடம்

கல்வியூர் பள்ளியூர் காரானர் வாழுமூர்
சொல்லிடும் மொழியாலே சோதரம் ஆனவூர்
துல்லிய எண்ணத்தை துணையாகக் கொண்ட
நல்லோர் வாழும் நாணிலத்துப் பேரூர்

ஆறுமுகம் தம்பதிக்கு அன்புப் பரிசாய்
சீறும் குணமற்ற சிறந்த ஆண்மகவாய்
அவதரித்த அமரர் கனகரெட்ணம் அவர்கள்
கவலைகள் தந்து கடந்து போனாரே

நேர்மைக் குணமும் நெடுத்த தோற்றமும்
ஈர்ந்தே நம்மை இறங்கிடச் செய்யும்
அதிகம் பேசாத அகிம்சை வாதியாய்
விதியை மதித்து வாழ்ந்து காட்டினார்

ஆசிரிய மணியாய் அகிலம் போற்றிட
வீசிடும் பரிவின் விந்தைகள் புரிந்தார்
கல்வி உலகில் கடமை வீரனாய்
சொல்வன்மை கொண்ட சுதந்திர மனிதராம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாசிப்பை நேசித்து வாழ்ந்த ஆசானாய்*
*தேசியம் மதித்துத் தெய்வமாய் வாழ்ந்தவர்*
*குடும்பக் கடவுளாய் குவலயம் நிமிர்ந்து*
*வடுக்கள் இல்லாது வாழ்ந்து முடித்தவர்*

*உள்ளமே வெள்ளையெனும் உண்மைக்குச் சாட்சியாய்*
*வெள்ளை உடையை விரும்பி அணிந்து*
*கள்ளமே இல்லாத கனிந்த இதயத்தால்*
*அள்ளிக் கொடுத்தார் அறிவெனும் வித்தையை*

*துருவத் தாரகையாய்த் தினமும் இருந்து*
*அருணன் போலவே அளித்து ஒளியை*
*பொய்மை அற்ற புகழுடை நீங்கள்*
*வாய்த்திடும் இறையாய் வைகுண்டம் வாழ்ந்திடுக.*

*ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி*

திரு. ப. மதிபாலசிங்கம்
**கோட்டக் கல்விப் பணிப்பாளர் (ஓய்வுநிலை)**
ஈச்சிலம்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்வி சிந்தனையாளர் நல்லவர் வல்லவர் நாடறிந்து ஆளுமை மிக்க ஆசான்"

திருகோணமலை கொட்டியாபுரத்தின் பள்ளிக்குடியிருப்பு பழமையும் விவசாய வளங்களும் தன்னகத்தே கொண்ட விளைநிலத்தின் சொந்தக்காரன் வாழ்ந்த காலத்தில் இம் மண்ணின் மைந்தனாக சிறப்புற வாழ்ந்து இறைபதம் அடைந்துள்ளார்.

"தோன்றிப் புகழோடு தோன்றுக அஃறிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் குறள் வழி வாழ்ந்த பெருமகனான அண்ணன் எங்கள் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர். புகழ்பூத்தகல்வியியலாளராக வாழ்ந்த பெருந்தகை பண்பாளர் அண்ணன் கனகரெத்தினம் ஆசிரியராக, அதிபராக செயற்திறன் மிக்க ஆளுமையுள்ள கல்வியலாளர் ஆவார். கல்விச் சேவைதனில் தன்னை அர்ப்பணிப்போடு எதிர்கால சந்ததியின் கல்வித்துறையில் மறுமலர்ச்சியை ஆற்றிய பணி மறப்பதற்கில்லை. அன்னாரின் செயற்றிறன் மிக்க செயற்பாடுகளின் நெறிப்படுத்தலில் நாங்கள் பல்வேறு அனுபவங்களை பெற்றுக் கொள்கின்றோம். அன்னாரது இனிமைச்சொற்கள் செயற்பாடுகள் மற்றவர்களைக் கவர்ந்திருந்தது. ஒருவன் பெற்ற கல்வி அவனது ஏழு பிறப்பிற்கும் உதவும் என்றும் வள்ளுவர் வளச்சிறப்புடைய அவரது குடும்பங்களும் அன்னாரிடம் கல்வி கற்றவர்களும் உயர்வான வாழ்க்கையில் முன்னேறுவதற்கு இவரது கல்விப் பணிகள் காரணிகளாக அமைந்திருந்தது எனலாம்.

அன்னாரது குணநலப்பண்புகளை சேர்ந்து பழகுகின்றபோது மற்றவர்கள் கற்றுக்கொண்டவை வாழ்க்கைக்கு அவசியமாகும். அடக்கம், அன்புடைய மற்றவர்களை மதித்து தனது வாழ்க்கையில் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுதாரப் புருஷராக வாழ்ந்து கல்வியின் பால் கொண்டிருந்த பற்றும் பாசமும் அன்னாரைத் தான் சேர்ந்த சமூகத்தின் மீது கொண்டிருந்த அளவுக்கதிகமான மாற்றங்களை ஏற்படுத்தி சமூகநல சேவையாளராக திகழ்ந்திருந்தார். இவரது கல்விச்சேவையை உற்று நோக்குகின்ற போது மற்றவர்கள் மத்தியில் நல்லவராக வல்லவராகவும் வாழ்ந்து யாமறிந்த சிறந்த ஆளுமைமிக்க நிர்வாகியாகவும் கற்றல் கற்பித்தலில் அவருக்கு அவரே சிறந்த கல்வியாளராகவும் வாழ்ந்திருந்தார்.

அன்னாரின் ஆசிரியப்பணியை நோக்குகின்ற போது மாணவர்கள் மத்தியில் தான எடுத்துக் கொண்ட பாடப்பரப்புக்கள் தன்னை பூரணமாக அர்ப்பணித்து கற்பித்தலில் நல்லாசிரியராகத் திகழ்ந்தார். அவரிடத்தில் நாங்களும் கூடவிருந்து தி/சேனையூர் மத்திய கல்லூரியில் கடமையாற்றிய காலகட்டத்தில் கற்றுக்கொள்ளக்கூடிய நற்பண்புகள், பாடவிதானங்கள், சீரிய பணிகள் எமக்கு நல்வழிகாட்டியாக அமைந்திருந்தமை குறிப்பிடக்கூடிய ஒன்றாகும்.

அண்ணன் கனகர் என சக ஆசிரியர்கள் மத்தியில் நன்மதிப்பும் மரியாதை மிக்கவராக வாழ்ந்திருந்தார். பாடசாலையின் எந்த நிகழ்வாக இருந்தாலும் தம்மை முன்னுதார புருஷராக ஈடுபடுத்திக் கொள்வது தனிச்சிறப்பாகும். அன்னார் அவர்கள் கடமையாற்றிய சம காலத்தில் ஆசிரியப்பணிகளில் உள்வாங்கிக் கொண்டவர்களான அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் மத்தியில் ஒவ்வொருவரையும் புரிந்துணர்வுடன் பாசத்தினைப் பகிர்ந்து செயற்பட்ட மதிப்புக்குரியவராக வாழ்ந்திருந்தார் என்பதில் பெருமை கொள்கின்றோம்.

இக்கல்லூரியின் கல்வித்துறையில் அதிக அக்கறையும், ஆர்வமும் மாணவர்களின் கல்வி நலன்களில் அதீத நிர்வாக செயற்பாடுகளின் மூலம் அதிபர் திரு. செ. கதிர்காமத்தம்பி அவர்கள் வெளியூர் ஆசிரியர்களை இனங்கண்டு திறமையுடையவர்களான நல்லாசியர்களை திணைக்களங்களிலிருந்து பெற்றுக் கொள்வதில் வல்லமை கொண்டு செயற்பட்டார்கள். அக்காலத்தில் வெளியூர் ஆசிரியர்களை பாடசாலைக்குள் பிரதிஅதிபர் திரு. க. துரைரெட்ணசிங்கம், சக ஆசிரியர்களுடன் அண்ணன் கனகர் இணைந்து அவர்களுக்குரிய மேலதிக தேவைகள் உதவிகளை பேச்சிலும் செயலிலும் செயற்படுத்தியவராக காணப்பட்டார். இவற்றுடன் கல்லூரியின் எந்தவொரு நிகழ்ச்சிகள் நடைப்பெற்றாலும் குறிப்பாக அவிபாகம் சமையல் பிரிவுகளில் தன்னை ஈடுபடுத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவராக முக்கிய கதாப்பாத்திரமாக எங்களுள் முதன்மை வெற்றிகள் திறமை குறிப்பிடத்தக்கது. இதனால் சுவை மிக்க உணவுகள் பெற்றுத் தருவதில் வல்லமை கொண்டவர்கள். இதில் பள்ளிக்குடியிருப்பு தயிரும் தேனும் உணவில் ஒரு தன்னிறைவு நிலையை வழிபடுத்தி நெறிப்படுத்தியமை பாராட்டிற்குரியது. எல்லோருக்கும் உதவும் கரமாக விளங்கி அனைவரிடத்திலும் நன்மதிப்புடையவராக திகழ்ந்திருந்தார்கள். அண்ணன் காலத்தில் நாங்கள் கூடியிருந்து வாழ்ந்திருந்தோம் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும் அன்னார் தனது குடும்பத்தில் தான் மட்டும் படித்து பல்கலைக்கழகம் கற்று மாண்புடன் வாழ்ந்தால் போதும் என நினைத்திருக்கவில்லை. தனது சகோதரர்களையும் கல்வியின்பால் வளர்த்தெடுத்து சிறந்த பதவிகளில் அலங்கரிக்கச் செய்து அழகுபார்த்தார். அவர்களது உயர்வுகளில் முன்னின்று பாராட்டி ஊக்கமளித்த பெருந்தகை எனலாம். இதே போன்று பிறர் பிள்ளைகளை தட்டிக்கொடுத்து சிறந்த கல்வியின் சித்திகளை வழங்கியதுடன் அவர்கள் வாழ்விலும் பங்களிப்புச் செய்தார். இதனால் பிறர் பிள்ளையை தடவினால் தன் பிள்ளை தானாக வளரும் என்பார்கள். அதன் வழியே தனது பிள்ளைகளும் அவரது நெறி தவறாத செயற்பாடுகளினால் சிறப்புடன் கற்று கல்வி உலகில் நல்ல பதவிகளில் தங்கள் தந்தையின் வாழ்வியலில் உயர்ந்து விளங்கினார்கள் என்றால் அன்னாரின் பரந்து விரிந்த பார்வையில் எல்லோர் மனதிலும் இம்மையிலும் மறுமையிலும் மதிப்புக்குரியவராக வாழ்ந்திருந்தார் என்றால் மிகையாகாது.

மேலும் கலையுணர்வும் வாசிப்புத்திறனும், நாடகம், கவித்துவம், கதை சொல்லும் பாங்கு, இலக்கிய கலைஞராகவும், விளையாட்டுத் துறை விற்பனராகவும் திகழ்ந்தார். கிராமிய கலைகளை வளர்ப்பதிலும் ஆக்கமும் ஊக்கமும், உற்சாகப்படுத்தல், மனந்திறந்து பாராட்டுதலிலும் புன்னகை பூத்த முகமலர்ச்சியுடன் எல்லோரிடத்திலும் மதிப்பிற்குரிய சகோதரத்துவத்துடன் வளர்ந்து சிறப்புச்செய்தார்கள். "அண்ணன்" என விழித்து அழைக்கும் நன்மதிப்புக்குரியவராக வாழ்ந்திருந்தார். இவரது காலத்தில் நாங்களும் வாழ்ந்திருந்தோம் என்பதில் பெருமை கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

**திரு. ஒப்பிலா மணி குலேந்திரன்**
**ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்**
**மூதூர் / திருகோணமலை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிருக்கும் வரை
# அவர் நினைவிருக்கும்

பயிர் எழில் கொஞ்சும்
பள்ளிக்குடியிருப்பு மண்ணிலே
பிறந்த ஆறுமுகத் தம்பதிகளின் அருமை
புதல்வராம் கனகரெட்ணம் ஐயா ஆசிரியரே

அவர் அப்போ கற்றுத் தெளிந்தவர்
பண்பாட்டு அம்சங்களை
தாங்கி நின்ற போதே
பூர்வீகத்தை பறைசாத்துகின்ற வேளையிலே

கடலும் களியும் சூழப்பட்ட எழிலான
கிராமமாக மலை முத்தல் நல்லூர்
திகழ்ந்த போதே அங்கே ஐயா
கல்வி கற்காத பிள்ளைகளின் குறை கண்டே

அவர்கள் குறை தீர்க்கவே தம்
கன்னி ஆசிரியர் தொழிலையே
நல்லூரிலே ஆரம்பித்தே இரவும் பகலும்
அயராது உழைத்தவரே எங்கள் ஐயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை பிள்ளைகளின் மகிழ்வு காணவே அவர்
என்றென்றும் இவ்வுலகில் வாழ்ந்தவரே அவர்
எப்பொழுதும் வெள்ளை உடையிலே
எழிலா இன்முகத்துடன் வாழ்ந்தவரே

அவர் சேவை வெல்லம் ஆனது
அவர் புகழையும் இகழையும் மறந்தவர்
ஒருவரையும் பகைக்காத கரும்பானவர் அவர்
ஒழுக்க நெறியிலே உயர்ந்தவர்
எம் உள்ளத்தில் நிறைந்த உத்தமர்
எம் நெஞ்சிருக்கும் வரை அவர்
நினைவிருக்கும்...

**கலாபூசணம் வை. பாக்கியராசா**
**தி/பாட்டாளிபுரம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்த முகத்தோடு ... ...

எருது கட்டு - எம்மூரில்
ஏர் ஓட்டி வாழ்ந்த
எத்தனை மனித மகான்களில்
அடையாள சின்னமான
ஆறுமுகம் பெரியப்பாவும்
தங்கப்பிள்ளை பெரியம்மாவும்
தரமாய் குணமாய் கருணையுடன்
பெற்றெடுத்த தங்கமகன்
மூத்த மகன்தான் எங்கள்
அண்ணன் கனகரெட்ணம் அவர்கள்
இன்று எம்மை விட்டுப் பிரிந்துள்ளார்
கல்விக்கே உரித்தானவரும்
கல்விக்காக வாழ்நாளையே
வாழ்ந்து காட்டிய மன்மதன்
பள்ளிக்குடியிருப்பின் இப்போதைய
பண்புக்கும் தனித்துவத்துக்கும்
நெறிப்படுத்திய நெறியாளர்
கரப்பந்து காற்பந்து வளர்த்தவர்
வளரும் மொட்டுக்கள் வரை என
அனைவரின் இதயங்களில்
இடம்பிடித்த பள்ளியூரின்
மகாத்மா காந்தி ... ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் பெரியப்பா அவர்கள்
இறையடி சேர்ந்த பின்பு
தன்னை உருக்கி பிறருக்கு
வெளிச்சம் காட்டும் மெழுகுவர்த்திதான்
எங்கள் அண்ணன் அவர்கள்
அம்மா கலங்கிய போது
ஆறுதல் கூறும் அளவுக்கு
செயல் வடிவம் கொடுத்தவர்
உடன் பிறப்புக்களை உரிமையோடு
தந்தை பணியை தான் ஏற்றார்
ஏரையும் எருமையையும் கட்டிக்காத்து
எழுத்தறிவு கல்வியை தொடர்ந்தார்
குடும்பத்தாருக்கு மட்டுமன்றி
ஊருக்கே உதாரணமானார் கல்வியில்
இல்லறத்தை நல்லறமாய்
இறைவன் அருளால் ஏற்று
பெண் பிள்ளைகள் மூவரும்
ஆண் பிள்ளைகள் இருவரும்
பெற்று நிறை மனிதராகினார்
இறுதிக் காலம் வரை
இறை பக்தியுடன் வாழ்ந்தார்
சிரித்த முகத்தோடு ... ...

விநாயகமூர்த்தி நிர்மலன்
தி/பள்ளிக்குடியிருப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதை விட்டகலாத கனகரெட்ணம் அண்ணர்

நாம் வாழ்நாளிலே பலரோடும் பழகுகின்றொம். எனினும் எல்லோரையும் மனதில் வைப்பதில்லை. காலம் கடக்கின்றபோது மறந்து விடுகின்றோம். ஆனால் ஒரு சிலரை மட்டும் எமது காலம் முழுவதும் மறப்பதில்லை. அவர்களது நற்குணம், செயற்பாடுகள், பண்பாடுகள் பற்றி சந்தர்ப்பம் வருகின்றபோது மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களுக்கு மரியாதை அளிக்கின்றோம். அவ்வகையான மனிதர்களுள் ஒருவர்தான் அமரத்துவம் அடைந்திருக்கும் பள்ளிக்குடியிருப்பூரை சேர்ந்த ஆறுமுகம் கனகரெட்ணம் அண்ணர் அவர்கள். என்னைப் பொறுத்தளவில் கல்விப்புலத்தில் என்னோடு பணிபுரிந்த எனக்கு மூத்தவர்களில் நால்வரை மட்டும்தான் அண்ணன் என்று அழைப்பது வழக்கம். அந்த நால்வரில் ஒருவர் தான் இந்தக் கனகரெட்ணம் அண்ணன்.

குடும்பத்தின் மூத்தவராகப் பிறந்த குழந்தைக்கு தந்தையான ஆறுமுகம் வட்டவிதானையார் என்ன நினைத்துப் பெயர் வைத்தாரோ தெரியவில்லை. கனகரெத்தினம் என்று பெயர் வைத்து விட்டார். கனகம் என்றால் பொன் இரத்தினம் என்றால் பொன்னைவிட மேலானது. ஆரம்பத்தில் தந்தைக்குத் தெரியாவிட்டாலும் பிள்ளை வளரத்தான் தெரிந்தது தனது மகன் இரத்தினம் தான் என்று. மூத்தபிள்ளையாக இருந்து அவ்வப்போது தந்தைக்கு கை உதவியாக இருந்து உதவியது மட்டுமல்லாமல் பெற்றோரின் வழிகாட்டலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியிலும் சிறந்து ஆசிரியப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டார். அத்தோடு தனது சகோதரங்களுக்கும் உறவினர்களுக்கும் கல்விக்கு வழிகாட்டியிருக்கிறார் என்பதையும் அறியக் கிடக்கின்றது. தமிழ் மொழியில் மட்டுமல்ல ஆங்கில மொழியிலும் கணிசமான அறிவு பெற்றவர். அவரிடம் நான் கண்ட திறமைகள் ஒன்று அமைதி, இரண்டு பொறுமை, மூன்று அவதிப்படாமல் பிரச்சனைக்கு முகம் கொடுத்தல் ஆகும். ஆசிரியப் பணியில் மட்டுமல்ல ஏனைய பணிகளிலும் கூட அவரிடம் இருந்த அறிவுத்திறன், அடக்கம் இன்னும் எவரும் அவர்மீது அன்பும், மதிப்பும், பாசமும் வைக்கத் தோன்றியதில் வியப்பில்லை. உருவத்தில் சற்று நிறம் குறையாக இருந்தாலும் உள்ளத்திலும் உடையிலும் வெள்ளையாகவே இருந்தார். செருப்பு அணியாத மனிதராக காலம் முழுவதும் அவர் வாழ்ந்தது எவரையும் ஆச்சரியப்பட வைத்தது எனலாம். ஒருமுறை நான் அவரிடம் கேட்டேன் ஏன் அண்ண செருப்பு அணிவதில்லை என்று. அதற்கு அவர் சொன்னார். குகன் முதல் போட்ட நான் தான். ஒரு நாள் பார்த்தேன் கழற்றிவிட்ட செருப்பைக் காணவில்லை அதிலிருந்து செருப்புப் போடுவதை நிறுத்திவிட்டேன். அவரது அடக்கமான அமைதியான நியாயமான பேச்சுக்கு என்னால் எதிர்வார்த்தை பேசமுடியவில்லை.

வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சேட்டும் கண்ணாடியும் காலில் செருப்புமில்லாமல் துவிச்சக்கர வண்டியில் வந்தால் எல்லாருக்கும் தெரியும் பள்ளிக்குடியிருப்பு கனகரெட்ண மாஸ்ரர் வாறார் என்று. வன்செயல் காலத்திலே பள்ளிக்குடியிருப்புக்கும் கட்டைப்பறிச்சானுக்குமிடையில் பாதுகாப்புப்படை நிற்கிறதா என்பதை அறிய கனகரெட்ண அண்ணனை எதிர்பார்த்து சேனையூர் மத்திய கல்லூரி வாசலில் பலரும் காத்து நிற்பது வழமை. பாதுகாப்புப்படை வீதி முழுவதும் நின்றாலும் இவரை ஒரு முறையாவது நிறுத்திச் சோதிக்கவுமில்லை திருப்பி அனுப்பியதுமில்லை. ஒரு முறை கேட்டோம் ஏதும் மந்திரங்களை உச்சரித்து வருகின்றார்களா என்று. மெல்லச் சிரித்துப்போட்டுச் சொன்னார். ஒரு மந்திரமுமில்லை அங்குமிங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிப் பார்க்கமாட்டேன் நேர்கொண்ட பார்வையோடுதான் வருவேன். மனதில் எந்த அச்சமும் கொள்ளமாட்டேன் என்றார். அண்ணன் எந்தப் பதவிக்கும் ஆசை இல்லாத மனிதர். கிடைத்த பணியில் தான் ஆசை கொண்டு உழைத்தவர். கூடிய நேரம் நூல்களை வாசிப்பதிலே செலவிட்டவர். மற்றவர்களோடு சேர்ந்து வீணாக அரட்டை அடிப்பதும் இல்லை.

கந்தசஷ்டி விரத காலங்களில் நான் பல வருடங்கள் புராண படனத்துக்காக பள்ளிக்குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்துக்கு வந்திருக்கின்றேன். அண்ணன் வருவார் புராண படனம் முடியும் வரை கண்மூடி சுவரில் சாய்ந்து இருப்பார். எவருடனும் பேச மாட்டார். புராண படனம் முடிய பூசை தொடங்கும் பூசை முடிய வீட்டுக்குப் போய் விடுவார். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவரோடு பலதும் பத்தும் பேசுவோம். தனது திருமணம் எப்படி நடந்தது என்று தொடங்கி பல அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொள்வார்.

என்னை அவர் ஒரு நாளும் மாஸ்டர் என்றோ வாத்தியார் என்றோ தம்பி என்றோ கூப்பிடவில்லை. குகன் என்றுதான் அழைப்பார். இன்னும் அவரை நினைக்கின்ற போது அவர் குகன் என்று அழைத்த வார்த்தை உள்ளத்தைத் தொடுகின்றது. தனது குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் நல்லவராய் வாழ்ந்து மறைந்த அன்னாரை அவரது ஊரும் மறக்காது அவர்களது நண்பர்களும் மறக்க மாட்டார்கள். நானும் மறக்க மாட்டேன்.

**சைவப் புலவர் கலாபூசணம்**

**அருளம்பலம் குகராஜா** J.P

**சம்பூர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் அமுதம்

தமிழின் அமிழ்தத்தை ஊட்டிய தமிழ் அழகனவர்
தந்தையாய் தம்மூரவரை தலைநிமிர்த்திய தலைவனவர்
தாயாய் தாலாட்டிய தமிழ் அன்னையவர்
தனக்கென வாழாத வள்ளுவன் வழிவந்தோன் அவரன்றோ

பள்ளியூரின் சிறப்பினை பார் போற்றிட
பண்புடனே பல ஆசான் உருவாக்கிய உயர்வாளர்
கல்வியை கற்கண்டாய் ஊட்டிய கலைமகளின் வம்சமவர்
கற்றலை அர்த்தமாக்கிய ஆசான்களின் அச்சாணி அவரன்றோ

பார்த்தவுடன் பழகத் தோணும் பண்பாளர்
பாரினிலே வாழ்வின் செம்மை காட்டிய சீராளர்
சிறியதொரு அறிவுரையில் பேருதவும் பேராளர்
சித்திரமாய் சிறப்பான நினைவுகளின் சிற்பியும் அவரன்றோ

மூங்கிலிடை முழுமதியாய் வலம் வருவோன்
மூச்சு நின்று போனாலும் முழுமையான விருட்சமாக – நீங்கள்
முதுதருவில் முளைதருவாய் முளைத்தெழுவோம் – நாங்கள்

கம்பீரம் கண்ணியம் கடமை கோர்த்தெடுத்த கண்ணாடி நீங்கள் பெரியப்பா
கனதியான மனதுடனே உங்கள் ஆத்மா சாந்தியடைய கடவுளை வேண்டியவளாக
கண்ணாடி பெரியப்பா உங்களுக்காய் என் கவிவரிகள் சமர்ப்பணம்

அன்புடன்

**விஜிதா முருகவேல்**

**அதிபர் - மட்/ககு/கிரான் விவேகானந்தா வித்தியாலயம்**

**வாழைச்சேனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/பள்ளிக்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில்

# அதிபராகக் கடமையாற்றியமை

### பள்ளிக்குடியிருப்பு வரலாற்றுப் பார்வை எனும் நூலிலிருந்து



இக்கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முதல் ஆசிரியராவார். 1971ம் ஆண்டிலிருந்து 1975ம் வரை ஆசிரியராக அதிபராக கடமையாற்றினார். அப்போது ஆசிரியர்களாக திருமதி மேரி கந்தையா, திரு.ஆ.குணராஜரெட்ணம் ஆகியோர் கடமையாற்றினர்.

பாடசாலைக் காணி வயல் நிலமாக (ஒரு ஏக்கர்) மாரிகாலத்தில் நெற்செய்கை பண்ணப்படும் இடமாக இருந்தது அவற்றை மக்களது சிரமதான உதவியுடன் வரவைகளை - திருத்தி உள்ளக விளையாட்டு மைதானமாக திருத்தியமைக்கப்பட்டது. தரம் 5 வகுப்புகள் உள்ளதால் அவர்களுக்கான இல்ல விளையாட்டுப்போட்டிகள் இங்கு நடைபெற ஏற்பாடாகியது.

அப்போதிருந்த 80 அடி X 20 அடி சீற்போடப்பட்டிருந்த கட்டடத்தின் ஒரு பகுதிக்கு மேடை சிரமதானத்தின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டது. இம்மேடை பாடசாலை வாணி விழாக்கள் - கலை நிகழ்வுகள் நடாத்தப் பயன்பட்டது. அத்துடன் திருகோணமலை கோணேஸ் - பரமேஸ் இசைக்குழுவினரின் இசைக்கச்சேரி நிகழ்வுகள் இம்மேடையில் இக்காலத்தில் இடம்பெற்றது. அத்துடன் கலைநிகழ்வுகளில் நாடகங்கள், பேச்சுக்கள் கவிதையரங்குகள் முதலான பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மிக நேர்த்தியாக இடம்பெற்றது. மாணவர்கள் தொகையும் கூடிக்கொண்டிருந்தது. தேவாரங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணோடு இசையோடு பாடிக்காட்டி கற்பிக்கும் திறனுள்ளவராக திகழ்ந்தார்.

பொது மக்களுடன் இணைந்து கலைமதி விளையாட்டுக் கழகத்தின், இசைக்குழுவின் இயக்குனராகவும், கி.மு. சங்கம், ப.நோ.கூட்டுறவு சங்கங்கள், ஆலயங்கள், சமய நடவடிக்கைகள், பொது விடயங்கள், தமிழ் இனப் பற்றாளராய் பல கிராம முன்னேற்ற விடயங்களில் இக்காலத்திலும் ஈடுபட்டுழைத்தவர்.

முடிவில் 6ம் தரம் வைத்து உயர்த்த முடியாத நிலை கணித / விஞ்ஞான ஆசிரியர் தட்டுப்பாடு, மாணவர் தொகை போதாமை பௌதீக வளப் பற்றாக்குறைகள் முதலான காரணங்களால் 6ம் தர மாணவர்களை சேனையூர் மகா வித்தியாலயத்திற்குசெல்ல வழிகாட்டினார். தொடர்ந்து அதிபர் பதவியை விட்டு - ஆசிரியராக சேனையூர் மகா வித்தியாலயத்திற்கு சென்றார். அதனால் பல மாணவர்கள் உருவானார்கள். பட்டதாரிகளாகவும் இன்று அதிபர்களாக, கோட்டக்கல்விப் பணிப்பாளர்களாக கடமையாற்றுகின்றர். ஓய்வும் பெற்றுள்ளனர்.

கிராமத்தின் கல்வியில் விழிப்புணர்வு ஏற்பட்ட காலம் எனலாம். ஆசிரியராக சேனையூர் ம.வி. இருந்து ஓய்வுக்கு முதல் ஒரு வருடம் (55 ஆவது வயதில்) தனது தம்பி ஆ. செல்வநாயகம் அதிபராக இருக்கும் போது கலைமகள் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக நேரமுகாமைத்துவம், கற்பித்தல் முறைமைகள், ஆசிரியத்துவம் பேணல் முதலான விடயங்களில் முன்மாதிரியாக இருந்து சிறப்பாக கடமையாற்றி ஓய்வு பெற்றார். (ஓய்வு பெறும்போது தனது மாணவனும் தம்பியுமான த. துரைநாயகம் அதிபராக கடமையில் இருந்தார்.)

## ஆறுமுகம் செல்வநாயகம் அவர்களின் பாடசாலைத் தலைமைத்துவம் எனும் நூலிலிருந்து திரு. ஆ. கனகரெட்ணம் அவர்களின் ஆசிரிய பணிபற்றிக் குறிப்பிடுகையில்...

### நான் கண்ட ஒரு ஆசிரியரின் தலைமைத்துவம்

- பாடசாலைக்கு வரும்போது 7.00 - 7.10 க்கு தினமும் சமூகமளிப்பார். (பாடசாலைகள் காலை 8.00 மணிக்கு ஆரம்பித்த காலம்)
- அதிகாலை விசேட வகுப்புக்கள் எனில் (O/L, A/L) வகுப்புக்களுக்கு 6.00-7.00 வரை நடத்துவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடசாலை வந்ததும் உடனே நேரத்தைப் பார்த்து உரிய நேரத்தைப் பதிவு செய்வார்.
- ஒவ்வொரு நாளும் பாடக்குறிப்பு எழுதி அதிபர் மேசையில் ஒப்பத்திற்காக வைப்பார்.
- தன்னுடைய வகுப்பிற்கு (வகுப்பாசிரியர்) சென்று வகுப்புத் தலைவருடனும் அன்று பொறுப்பளிக்கப்பட்ட மாணவர்களுடனும் வகுப்பறை வேலைகளைக் கண்காணிப்பார்.
- காலை ஆராதனைக்கு மணி அடித்ததும் வகுப்பு மாணவர்களை வரிசையாக்கி அமைதியாக்கி அனுப்பி தானும் வருவார்.
- காலை ஆராதனை முடிந்ததும் மாணவர்கள் வகுப்பிற்குச் செல்ல தான் காரியாலயத்தில் பாடக்குறிப்புக் கொப்பியை எடுத்து வகுப்பிற்குச் செல்வார்.
- 40 நிமிட் பாடவேளையும் திட்டமிட்டப்படி நடத்தி மதிப்பீடு செய்து
- பிழை திருத்தமும் செய்து முடித்து தருவார். இதனுள் Home Work வீட்டு வேலைகள் கொடுக்கப்பட்டவற்றையும் திருத்தி ஒப்பமிடுவார்.
- தனது நேரசூசியின் படி இவை மிகவும் சீராக நடைபெறும்.
- ஒரு சில ஓய்வு பாடவேளை இருப்பின் தானாக ஆசிரியர்கள் அற்ற வகுப்பிற்குச் சென்று கற்றல் செயற்பாட்டை நடாத்துவார்.
- காலை ஆராதனைக்கு வழங்கப்படும் தலைப்பில் மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமான கதைகள் கூறி மாணவர்களின் ஒழுக்கம், ஒழுங்கு, மனப்பாங்கு, விழுமிய விருத்திக்கு உரமிடுவார்.
- தினமும் வெள்ளை (வேட்டி) உடையணிந்து நேர்த்தியாக சமூகமளிப்பார்.
- கடைசிப்பாட நேரம் தனது வகுப்பிற்குச் சென்று மாணவர்களின் ஏனைய பாட வீட்டுவேலைகள் பற்றி அறிந்தும் பாடப்பதிவுகள் பூரணப்படுத்தல் போன்றவற்றைக் கண்காணிப்பார்.
- தமிழ் மொழி வாழ்த்து அல்லது அன்றைய இறுதி நேர ஆராதனை முடிந்து மாணவர்கள் வரிசையாக ஒழுங்காக வகுப்பறையிலிருந்து வெளியேறி சென்ற பின் காரியாலயத்தில் வந்து வெளிச் செல்லல் ஒப்பமிடுவார்.
- தான் லீவுகளைப் பெறுவதாயின் லீவு விண்ணப்பம் பூரணமாக நிரப்பப்பட்டு அன்றைய தனது கற்பித்தலுக்கான குறிப்புக்களை இணைத்து இரு நாட்களுக்கு முன்பே சமர்ப்பிப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மூன்று மைலுக்கு அப்பால் குறிப்பாக திருகோணமலைக்குச் செல்வதாயின் நிலையத்தை விட்டு நீங்குவதற்கான விண்ணப்பக் கடிதமும் சமர்ப்பித்து அனுமதி பெறுவார்.
- முகாமைத்துவத்தால் பொறுப்பளிக்கப்படும் ஏனைய கடமைகளையும் மிக நேர்த்தியாக செய்வார்.
- சக ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு செயற்படுவார். குறிப்பாக விளையாட்டுப் போட்டியில் சுவட்டு, மைதான நிகழ்வுகளுக்கான கோடுகள் சரியான அளவுத்திட்டத்தில் இடுவார்.
- அணிநடை, காற்பந்து முதலானவற்றை பயிற்றுவிப்பார்.
- பாடசாலை சமூகத்துடன் இணைந்து முக்கிய தேவைகள் பாடசாலைக் காணிகள் பெறுதல், கட்டடங்கள் அமைப்பதற்கான இடத்தெரிவுகள் (School Maping) மிகவும் நேர்த்தியாக எதிர்கால தூரப் பார்வையுடன் (Vision) நிறுவுவதற்கு செயற்படுவார்.
- இறுதியாக தனது மாணவன் அதிபராக இருக்கும் போது (55 வயது முடிவில்) அன்று 2.10 p.m. இன்றுடன் ஓய்வில் செல்கின்றேன் என்ற கடிதத்தை கொடுத்துச் சென்றார்.

ஆசிரியரின் முன்மாதிரியும் தலைமைத்துவத்தில் முக்கிய பங்காற்றுகின்றது என்பதை உணரமுடிகின்றது.

கடமையிலிருந்த அசிரியர்களுக்குத் தற்போது SBTD பாடசாலை மட்ட அபிவிருத்தி என்று பல கருத்தரங்குகளை வைப்பதிலும் பார்க்க, முன் மாதிரியான இச் செயற்பாடு ஒரு கற்பித்தலாக அமைந்ததையும் ஓர் அனுபவ மூலமாக கண்டறிந்த விடயம்.

இவ்வாறு சிறந்த அதிபராக கடமையாற்றியவர்களின் முன்மாதிரிகள்.

சிறந்த பிரதி அதிபர்களின் முன்மாதிரிகள்.

ஒரு பிரதி அதிபரிடம் பிரதி அதிபரின் கடமை என்ன? எவ்வாறு இருக்க வேண்டும். என வினவிய போது,

ஒரு பாடசாலையின் அதிபர் பாடசாலையின் நோக்கங்களை சிறப்பாகவெளிப்படுத்துவதற்கு மிகவும் உறுதுணையாக இருத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக, போட்டோ பிரதி மெசின் போன்று முழுமையாக பிரதி பண்ணப்படுவது போன்று முழுமையாக அதிபரின் நல்ல முழு எண்ணங்களும் பிரதிபலிக்கக் கூடியதாக விசுவாசமாக அமைய வேண்டும் என்றார்.

மாணவர், வகுப்பு மாணவ தலைவர்கள், மாணவர் தலைவர்கள், பகுதித் தலைவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் ஒவ்வொருவரும் முன்மாதிரியான தலைவர்களாக இருந்து முரண்பாடற்ற முகாமைத்துவம் நடைபெறும் போதே பாடசாலையின் இலக்கை தரமான சமூகத்தை உருவாக்க முடியும்.

**திரு. ஆ. கனகரெட்ணம் அவர்கள் தேசிய கல்வி நிறுவனத்தில் முகாமைத்துவ பயிற்சியில் ஈடுபட்ட போது அங்கு விரிவுரையாற்றிய Director General தேசிய கல்வி நிறுவன முகாமைத்துவத்திற்கு பொறுப்பான பணிப்பாளர் நாயகம் திரு.வில்பிரட் பெரேரா அவர்கள் பாடசாலையின் பிரதி அதிபர் எவ்வாறு இருக்க வேண்டும் என வரைவிலக்கணப்படுத்த முடியுமா? எனக் கேட்கும் அவருக்கு அளிக்கப்பட்ட பதில்.**

| | | |
|---|---|---|
| விரிவுரையாளர் | : | பிரதி அதிபர் எப்படி செயற்பட வேண்டும். |
| பிரதி அதிபர் | : | பாடசாலையில் நோக்கங்கள் நிறைவேற அதிபர் எடுக்கும் செயற்பாடுகள் அனைத்தையும் சேர்த்து செயற்படுதல்.<br>உதாரணமாக: போட்டோ பிரதி இயந்திரம் கொடுப்பதை பூரணமாக பிரதி பண்ணப்படுவதைப் போன்று முழுமையாக சேர்ந்து செயல்படுதல் வேண்டும். |

இன்றும் தொடர்ந்தும் இக் கூற்று பேணப்பட்டும் பலருக்கு போதிக்கப்பட்டும் வருகின்றது. அவ்வாறு சுருக்கமான தெளிவான விளக்கத்தினை ஆங்கில மொழி மூல விரிவுரையின் போது இடம் பெற்ற சம்பவம்.

**ஆறுமுகம் செல்வநாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகரெட்ணம் என்னும் கல்வியியலாளர்

*முத்தான மூதூரின் முத்த தமிழ்ப் பதியான*
*பள்ளிக்குடியிருப்பென்னும் பசுமைசூழ் ஊரினிலே*
*சித்தி விநாயகர் அருள் சித்தமெல்லாம் நிறைந்திருக்க*
*சிறப்புடன் வாழ்ந்த எங்கள் முதன்மைசேர் பண்பாளர்*

*இல்லத்தின் மூத்தவராய் இன்னல்களைத் தாங்கி*
*இளையோர்கள் அனைவருக்கும் இனிதாக வழிகாட்டி*
*கல்வியிலே சாதித்திட ஏற்றிவைத்த ஏணியிவர்*
*காத்திரமாய் பணி செய்தார் கனகரெட்ணம் ஐயா*

*கடின உழைப்பாலும் தான் கற்ற கல்வியாலும்*
*ஆசு கழைகின்ற ஆசானாகப் பணி ஏற்றார்*
*மாசில்லாக் கல்வியையும் மாண்புறு பண்பினையும்*
*மாணாக்கர்களுக்கு ஊட்டி மானிலம் போற்றச்செய்தார்*

*தலைமை ஆசிரியர் பணிதனைத் தான் சுமந்து*
*தளைத்திடும் கல்விதனை தரணியெங்கும் பரவச்செய்தார்*
*அதில் பதவிக்கே அகராதியாய் அமைந்து*
*அற்புதப் பணிசெய்த ஆழ்தறிந்த அறிவாளர்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாலை மரியாதைக்கு மயங்காதார் யாரும் உண்டோ*
*கனகரெட்ணம் ஐயா! என்றுமதை ஏற்றதில்லை*
*மிதித்த புல் சாகாதென்ற மாண்புறு வாழ்வு வாழ்ந்த*
*மகத்தான மாமனிதர் மனிதருள் மாணிக்கமிவர்*

*உடையில் மட்டுமல்ல உள்ளத்திலும் வெள்ளையிவர்*
*ஊரின் பெருமைசொல்லும் உத்தம மனிதரிவர்*
*எவரும் குறைசொல்லா ஏர்நிலப் பசுமையிவர்*
*என்றும் நிலைத்திருக்கும் எங்களய்யாவின் புகழ்*

*பிறப்பின் பெருமைதன்னைப் பிறருக்கு உணர்த்தியவர்*
*இறப்பின் பின்னும் வாழும் எம் முன்மாதிரியிவர்*
*கனகரெட்ணம் என்னும் கண்ணிய மனிதர் தன்னை*
*கவியில் எழுதியதால் கண்ணியமானேன் நான்*

மாணிக்கம் இளங்கோ
Bed Med
அதிபர்
பட்டித்திடல் மூதூர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகரெட்ணப் பெரியப்பா

*தம்பி பிள்ளைகள் என்று*
*பிரித்துப் பார்க்க மாட்டார்*
*அன்போடு அரவணைத்து*
*ஆறுதல் வார்த்தை கூறி*
*கல்வியை கருத்துடனே கற்க*
*சிரித்துப் பேசி சிந்தனையை*
*ஊட்டியதால்....*

*ஆசிரியத் தொழிலில் அடியெடுத்து வைத்த*
*செய்தியை சொல்லப் போகும் முன்*
*சொல்லி விட்டார் என் அப்பா*
*நேரில் சென்றேன் நான்*
*நேரத்தின் மகத்துவத்தையும்*
*பெறுமதியினையும் உரைத்தார்.*
*கருத்துக்களை, அறிவாற்றலை*
*செவியேற்றினார் கருத்துரைத்தார்*
*கனரெட்ணப் பெரியப்பா*
*அவர்கள்*

மகன்

துரைநாயகம் சிவசங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பெரிய வாத்தியார் ஐயா...

கனி மரங்கள் பூச்சொரியும் மாவலியின் கரையோரக் கிராமமும் வயலும் வயல்சார்ந்த மருத நிலப்பரப்பும் கொண்ட பழம்பெரும் பதியாம் பள்ளிக்குடியிருப்பில் ஆறுமுகம் தங்கப்பிள்ளை தம்பதியினருக்கு அருந்தவப் புதல்வனாக முதலில் அவதரித்த எங்கள் பெரிய அண்ணா அமரர். கனகரெட்ணம் அவர்கள் அவரது உடன் பிறப்புக்கள் நான்கு ஆண்கள், இரண்டு பெண்கள்.

அன்னார் தனது ஆரம்பக் கல்வியை பள்ளிக்குடியிருப்பு மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும், மூதூர் புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்திலும், தி/இந்துக்கல்லூரியிலும் எஸ்.எஸ்.சி (S.S.C) வரை கற்று சிறந்த பெறுபேறுகளையும் பெற்று எமது ஊருக்கும், ஈன்றெடுத்த பெற்றோருக்கும் பேரும் புகழும் பெற்றுக் கொடுத்த பெரும் புகலாழர் உயர் கல்விக்காக மட்/வந்தாறுமூலை மத்திய கல்லூரிக்கு சென்ற போதிலும் குடும்ப சூழ்நிலை காரணமாக உயர் கல்வியை தொடர முடியாத நிலை ஏற்பட்ட போதிலும், விடா முயற்சியும் விவேகமும், உயர் ஊக்கத்தோடு செயற்பட்டு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நுழைவுப் பரீட்சையில் முதல் மாணவனாக சித்தி பெற்று மட்/ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தன்னை ஆர்வத்துடன் இணைத்துக்கொண்டார்.

அங்கு ஈராண்டுகள் பயிற்றப்பட்டு, பயிற்சிபெறும் மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியராக தகுதி பெற்றார். எமது ஊரின் முதல் ஆசிரியரும் அவரே.

அன்னார் சிறு பராயம் தொட்டே கல்வி, சமய, புறக்கிருத்திய விடயங்களில் மிக ஆர்வத்துடனும், அயராத ஊக்கத்துடனும் ஈடுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டினார். சைவ சமயத்தில் தீவிர ஈடுபாடு உடையவராயினும் இன மத வேறுபாடின்றி தன்னை நாடி நின்றோருக்கு இயன்ற உதவிகளை செய்யும் பண்பாளர். சிறு பராயம் தொட்டே உற்றாரும், ஊராரும் மதிக்கத்தக்க நல்ல குணவானாக விளங்கிய பெரு மகன்.

**பல ஆண்டுகாலம் கல்வித் துறை சார்ந்த அர்ப்பணிப்புச் சேவை மூலம் அவர் சிறந்த நல்லாசானாக விளங்கியவர். சமூக, சமய கலாசார விடயங்களில் ஈடுபாடு காட்டி அறிவுக் களஞ்சியமாக திகழ்ந்தவர் பொது, முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் யாவற்றிலும் எங்களுக்கு எல்லாம் ஆரோக்கியமான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் அவ்வப்போது வழங்கி வந்தவர். சமூகத்தின் ஓர் முன்மாதிரியான பெருந்தகையாக வாழ்ந்த எங்கள் பெரிய வாத்தியார் எமது கிராமத்தின் கல்வியில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்திய செயல் வீரர் எனலாம்.**

இறைபக்தி, ஒழுக்கம், இன்சொல் பண்பு அன்புடைமை, நல்லாசிரியப்பணி, எமது கிராம மாணவர்களின் கல்வி வளர்ச்சியோடு தாம் கற்பித்த இதர பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் காட்டிய அவரது அக்கறையும், ஆர்வமும் எண்ணிலடங்காதவை.

எண்பத்தொரு ஆண்டு காலம் இப்பூவுலகில் வாழ்ந்து இறையடி சேர்ந்த **எங்கள் பெரிய வாத்தியார் ஐயா** அவர்களது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனைகள் மேற்கொள்வதோடு அவரின் பரிவால் துயர்வுறும் அன்னாரது குடும்ப உறவுகளுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் பகிர்ந்து கொள்கின்றேன்.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டுபவனுள் துணிவு"

பொன் இரத்திசிங்கம்
**ஓய்வுநிலை அதிபர்**
**தங்கபுரம், தி/பள்ளிக்குடியிருப்பு**

**"கல்வி ஒரு வலிமையான ஆயுதம்
உலகத்தை மாற்ற அதைப் பயன்படுத்து"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான அண்ணா

*அன்பான அண்ணா*

*பாசமும் அன்புடனும் வளர்த்தீர்*

*இனி இப்போ உங்கள் திருமுகம் காண*

*உங்கள் பிரிவால் ஏங்கித் தவிக்கின்றேன்*

*அப்பாவை இழந்த நிலையில்*

*இரண்டு வயதிலிருந்து அம்மாவுடன் வளர்த்த*

*தெய்வம் நீங்கள்*

*எங்கே எமை விட்டு சென்றீர்கள்*

*எங்கள் ஏக்கம் தவிர்த்திடவே*

*வந்திடுங்கள் அண்ணா!*

*அம்மாவின் அர்ப்பணிப்பும்*

*அன்பான பாசமும் எமை*

*கல்வியில் மேலோங்க*

*அயராதுழைத்த அண்ணா!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எப்படி நாம் மறவோம்*
*அக்கா - அண்ணன்மார்*
*அனைவரும் பெரியண்ணன்*
*என்றே எப்போதும் இப்போதும்*
*அழைக்கும் அன்பான பெரியண்ணா!*

*இறுதி நாட்களில் தினமும்*
*இருமுறை என்னிடம் வந்து*
*தேநீர் அருந்தி தேவையான*
*அறிவுரைகளை வழங்கியதெல்லாம்*
*எமை விட்டு பிரியத்தானோ!*

*அண்ணியும் அம்மாவாய்*
*எமை இன்றும் பார்க்கும்*
*பாசத் தாயாய் பரிணமிக்கின்றார்*
*நீங்கள் விட்டுச் சென்ற*
*பண்பும் பாசமும் எமைத் தொடர்கின்றது.*

*மீண்டும் வாராயோ....?*
*வானிருந்து எமைக் காப்பாய்*
*எனும் எண்ணத்தில்....*

உங்கள் அன்புத் தங்கை
ஆறுமுகம் நாமகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று நான் கண்ட
# திரு. ஆ. கனகரெட்ணம் ஆசிரியம்

நான் கண்ட ஆறுமுகம் கனகரெட்ணம் ஆசிரியர் அவர்கள் தி/பள்ளிக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவர். மூதூர் தி/புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்தில் பயின்று ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சையில் தேறியவர்.

இவர் எங்ஙனம் எனக்கு அறிமுகமானார் என்பதை திடமாக கூறமுடியாத போதும் கடந்த 05.01.1989 ல் தி/பெரியவெளி அ.த.க பாடசாலையில் உதவி ஆசிரியராக திரு. ம. ஸ்ரனிஸ்லாஸ் அதிபர் அவர்கள் தலைமையில் கடமை புரிய வாய்ப்புக் கிடைத்தது. அவ்வேளையில் திரு. கனகரெட்ணம் ஆசிரியரும் அங்கு கடமையில் இருந்தார்.

அன்று முதல் அவரின் உறவு நிறைவாகவே கிடைத்தது. இந்த உறவானது கூடவே கற்பித்த ஆசிரிய தொண்டின் மூலம் கிடைத்ததா? அல்லது உற்ற நட்பின் மூலம் கிடைத்ததா?

எதுவான போதும் எங்கள் இருவர் நட்பும் உடன் பிறப்பு சகோதர நட்பாகவே கருதினோம். எனவே தான் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவரைப் பார்க்க வேண்டும் போல இருந்தால் அவரைப் போய் பார்த்து வருவேன்.

**அவரின் பணிவாழ்வின் காலத்தில் அவரிடம் காணக்கிடைத்தவை கடமையிலே கண்ணியம், நெஞ்சிலே உறுதி, சிந்தித்து செயற்படும் ஆற்றல், சொல்லாலும் செயலாலும் பிறரை புண்படுத்தாத மனப்பக்குவம்.**

**இத்தனையும் ஒன்றுசேர இயங்கியவர் தான் நான் பார்த்த காலஞ்சென்ற திரு. ஆறுமுகம் கனகரெட்ணம் ஆசிரியர். அவரின் ஆன்மா சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.**

**அ. இராசேந்திரம்**
ஓய்வுநிலை அதிபர்

இக்பால் வீதி, மூதூர் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்காத நினைவுகள்

*எளிமையுறு வாழ்வுதனை*
*இனிமையென ஆக்கியவர்*
*குடும்பத்து மூத்தவராய்*
*கோபுரமாய் உயர்த்தியவர்*

*பள்ளிக்குடியிருப்பில் பாங்காக வாழ்ந்திருந்து*
*பக்குவமாய் கற்றுயர்ந்த*
*பண்பான மனிதரிவர்*
*சேனையூர் கல்லூரி*
*சிறப்புறவே உயர்வதற்கு*
*தூணைத் தளபதியாய்*
*தாங்கி நின்ற பெருமகனார்*

*கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடனே*
*கல்லூரி மாணவர்கள் கற்றிடவே வைத்த இவர்*
*அதிகாலைச் சேவல் ஆர்ப்பரிக்கும் முன்னெழுந்து*
*விடியக்காலைப் பொழுதினிலே வேட்டிகட்டி வெளிக்கிட்டு*
*ஈருருளி வாகனத்தில் என்னாளும் பயணித்து*
*ஏழுமணி முன்பு இருந்திட்ட பெருமகனார்*

*காலில் செருப்பில்லை, கனத்த உடலில்லை,*
*போலித்தனமில்லை, புதுமை பல தெரியாததில்லை*
*நால்வேதம் தெரியும், நற்றமிழும் கற்றவரே*
*பல்துறை விற்பன்னர், பழம் பாடல் விருப்புடையார்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரபாபுவின் தனிப்பாடல் தான் படிப்பார்
எத்தனைதான் துன்பங்கள் இருந்திட்ட போதினிலும்
அத்தனையும் மறந்து அன்பாகப் பேசுபவர்
அதிபர் துரை யோடு அன்பாக இணைந்தன்று
கனகாலம் கனகராய் கச்சிதமாய் வாழ்ந்தீரே

நீண்டதொரு வரலாற்றை நிலையாக வைத்தெங்கள்
சேனையூர் பள்ளி சிறந்திடவே பணி செய்தீர்
முத்தமிழின் வித்தகராய் முதல்மொழியாம் தமிழுக்கு
சத்தான உரம் கொடுத்தீர் சரித்திரராய் ஆனீரே

ஐயா, உம் பணிகள் ஆறாது எம்மூரில்
மெய்யே உரைக்கின்ற மேல் மகனே
பள்ளியூர் - சேனையூர் பாலமாய் அமைந்தவரே
ஆறுமுகம் எமக்கீர்ந்த அன்பான உறவினரே

நாட்டில் உயர் யுத்தம்
நாளெல்லாம் நடக்கையிலே
கேட்டாலே மெய்சிலிர்க்கும் கிஞ்சித்தும் பார்த்ததில்லை
பாதை திறந்து பலபேர்க்கு வழிசமைத்தீர்

என் கவிவரிகள் அதிகாலை ஒலிர்த்தப்போ
விழித்திருந்து கேட்டு விமர்சனங்கள் செய்வீரே
இறுதிநாள் நாம் பேச மறதியிப்போ என்று சொன்னீர்
அதிகாலைப் பயணத்தை அடிக்கடி கூறிநின்றீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்திறன் பெறவே நீண்ட நாள் பறிற்றுவித்தீர்
அயராது உழைத்து அன்பாகப் பழகிவந்தீர்
கொள்கை தவறாத குலவிளக்கே கோமகனே
மெய்தான் இறப்பெனினும் வீழாது உங்கள் புகழ்
எம்மூரும் பள்ளியும் என்றும் மறக்காது
காலங்கள் பல நூறு கடந்து தான் போனாலும்
சாலப்பணி செய்தீர் சாற்றுகின்றோம் உம் புகழை

வெள்ளையுடையின்றி வேறு உடைகண்டதில்லை
விபூதி அணிந்த நெற்றி விருப்போடு பேசும் மனம்
கண்களில் நின்று கனவாகி போனதுவே
விண்ணே உமக்கு விருந்தாகிப்போனதின்று

வேண்டுகின்றோம் உம்முறவாய்
விடைபெற்றீர் இவ்வுலகில்
பெருமகனை இழந்து பேதலித்து நிற்கின்றோம்
வதுவையில் இணைந்த வண்ணநிலா அக்காவும்
உறவுகள் எல்லோர்க்கும் உளம் அமைதி பெற்றிடவே.
இறைவனருள் வேண்டி இறைஞ்சுகின்றோம்
ஏற்றிடுவீர்.

அன்பில் கலந்த உறவு
சேனையூர். இரா. இரத்தினசிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன் சொல் அறியாத

# அமரர் பள்ளிக்குடியிருப்பு
# ஆறுமுகம் கனகரெட்ணம்

*எனக்குள் நான் நீந்திச் செல்கிறேன்*
*எனது பன்னிரண்டு வயது பயணத்தின்*
*பாலத்தோப்பூர் நினைவுக்கு வருகிறது.*
*வாழையூர் நாம் சென்றுவர தோப்பூரில்*
*துவிச்சக்கர வண்டிகள் எமக்காக காத்திருக்கும்.*
*வாழ்க்கையில் நான் கண்ட சந்தோசம் பேரொளி பெறுகிறது.*
*எம்மை ஏற்றிச் செல்லும் நீல நிற துவிச்சக்கர வண்டிகள்*
*இன்னும் நினைவுகொள்கிறது.*
*கலைமகள் பள்ளி கொள்கிறாள்*
*பயணங்கள் பாய்ந்தோட*
*மெய்வல்லுனர் திறனாய்வில் கலந்துகொள்ள*
*சேனையூர் மகா வித்தியாலயம் நானும் செல்கின்றேன்*
*அங்கேதான் கனகரெட்ணம் பெரியப்பாவை நானும் சந்திக்கிறேன்.*
*அவருடன் பழகிய காலங்கள் தேன் போன்று*
*தித்திக்கும் சுவைமிகு காலமாகும்.*
*வாழ்க்கை திறம்பட வாழ பல வித்தைகளை*
*கற்றுத்தந்த பெரும் புகழ்.*
*பள்ளிக்குடியிருப்பின் பெருமை தரு கல்விமான்.*
*அச்சப்படாத தமிழ் ஆசான்*
*மிச்சப்படாமல் கல்வியை திட்டமிட்ட வழிகாட்டி.*
*நிறைவான மனிதனாக பள்ளிக்குடியிருப்பு*
*பெற்றெடுத்த வரலாற்று பிதாமகன்*
*அமரத்துவம் அடைந்தாலும் எம் நெஞ்சில் என்றும் குடியிருப்பார்*

'கரன்' ந. விஜிதரன்
வாழைச்சேனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகரெட்ணம் அண்ணன்

கனகரெட்ணம் அண்ணனின் தந்தை ஆறுமுகம் ஐயா அவர்கள் தனது மகனை எனது பாட்டனாராகிய கோபாலபிள்ளை ஆசிரியரிடம் கல்வி கற்பதற்காக கொண்டு வந்து சேர்த்து விட்டார். அந்நாள் 1948 தைப்பூசத்தினதுமாகும். அவர் மூதூர் வீட்டிற்கு வந்தபோது எனது அம்மாவைத் (வாவாக்கா) தான் முதன் முதலாகக் கண்டதாக அடிக்கடிக் கூறுவார். எனது அம்மாவின் சகோதரங்களுடன் சேர்ந்து பத்துப் பேராகி விட்டனர்.

எமது புதுவருடம், நத்தார் ஆகிய தினங்களை எங்கள் குடும்பத்தோடு கொண்டாடுவதற்கு கிராணுக்கு வருவார். அச்சந்தர்பப்பங்களில் அவரும் எங்களில் ஒருவராகியே விடுவார். அவர் இருக்கும் இடமே கலகலப்பாகி விடும். நாங்கள் சுற்றுலா செல்லும்போது கதிர்காமம், நாவலப்பிட்டி, கம்பளை, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்ளுக்கு எங்களுடன் வருவார். எனது தாயாரின் சகோதரங்கள் ஒவ்வொருவரும்ஒவ்வொரு ரகம். ஆனாலும் அண்ணன் அவர்கள் ஒவ்வொருவரதும் குணாதிசயங்களை அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்வார். சில சந்தர்ப்பங்களில் குடும்பங்களுக்கிடையெ சமாதானத்-தூதுவராகவும் இருந்து செயற்பட்டும் உள்ளார். பேச்சும் வாங்கியுள்ளார். எங்கள் குடும்பத்தாரோடு ஒருநாளும் கோபிக்கவே மாட்டார்.

"அவர் தன் திருமணத்தின் போது தன் மனைவியிடம் எனக்கு உடன்பிறவாத சகோதரர்கள் ஒன்பது பேர் உள்ளனர். அவர்களுடனும் சேர்ந்து தான் வாழவேண்டும்" என்று கூறியதற்கேற்ப அவவும் எங்கள் குடும்பத்தவர்களுள் ஒருவராகி விட்டார். எங்கள் குடும்பங்களில் நிகழும் சகல நிகழ்வுகளிலும் அண்ணனின் குடும்பத்தின் பிரசன்னம் எப்போதும் நேரத்துடன் காணப்படும். விசேடமாக எங்கள் குடும்பத்தில் உள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியவர்களுக்கு சிறியவராகவும் குழந்தைகளோடு குழந்தையாகவும் வாலிபனாகவும் நின்று விளையாடுவார். கட்டைப்பந்து, கிரிக்கெட் ஆகிய விளையாட்டுக்களை எமது தம்பிகளுடன் வீட்டில் விளையாடும்போது வளவிற்குள் செல்லும் இராணுவத்தினரும் அதைப்பார்த்து சிலாகித்துப் போவதும் இன்னமும் என் கண் முன் நிற்கின்றது.

அண்ணன் இங்கு வருகின்றார் என்றால் ஒரே வீட்டிலுள்ள சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டமாகவே இருக்கும். எருமைத்தயிர், எருமைப்பால், எருமைப்பால் பொங்கல், தேன் வைதயுடன், வீரப்பழம், பாலப்பழம், இலுப்பெண்ணெய், சீமைக்கச்சான், கச்சான், அரிசி என பலவிதமான பொருட்களுடன் பண்டிகைக் காலங்களில் மனையாளின் கைவரிசையான பலகாரங்களையும் கொண்டு வருவார். பழைய சினிமாப்பாடல்களை முணுமுணுத்த வண்ணமே வேலைகளைச் செய்வார்.

கிறீஸ் மனிதனின் பிரச்சினைகளின் போது சுமார் 2 மாதங்களாக எங்களுக்குத் துணையாக வந்து நின்றதை மறக்கவே முடியாது. கடந்த பத்து வருடங்களாக தைப்பூசத்தினத்திற்கு இங்கு வருகை தந்து எம்மோடு இணைந்து கொள்வார். அத்துடன் இங்கு வந்து சேர்ந்த தினத்தை ஞாபகப்படுத்திக் கூறுவார். கடைசியாக அவருக்கு இயலாத போதிலும் அவரது உடன்பிறவாத சகோதரங்களான ஆனந்தம் அண்ணாச்சி (கதிர்காமநாதன்) நந்தாக்கா ஆகியோரின் மரண வீட்டிலும் கலந்துகொண்டார். அவர் இன்று எம்மை விட்டுப் பிரிந்தாலும் என்றும் அவர் எம்முடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார். அவரது தாழ்மை, எளிமை, இரக்கம், அன்பு, சகிப்புத்தன்மை, பண்பாகப் பேசுதல் ஆகிய நற்பண்புகளை எம்மால் மறக்கவே முடியாது.

**'பெத்தனி'**
**கிரான்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரமபதமெய்திய பெரு மதிப்பிற்குரிய

### ஆசிரிய பெருந்தகை

# திரு. ஆறுமுகம் கனகரெட்ணம் ஆசான் அவர்களைப் பற்றிய நினைவுரை

தமது ஆசிரிய தொழில் சார்ந்த வாழ்வியல் நெறிதனை தார்மீக வழி நின்று தமது சொந்தங்களுக்கும், உறவினர்க்கும் ஊரவர்களுக்கும் என்ற வரையறைதனைக் கடந்து தான் சேவையாற்றிய சகல பிரதேசப் பாடசாலைகளின் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும். கல்விப் பணிமனை உயர் அதிகாரிகளாலும் விரும்பப் பட்ட ஆசிரியராக மட்டுமன்றி பிரதேசத்தின் சகல இன மக்களதும் அபிமானத்திற்குரிய ஆசானாகவும் அவர் திகழ்ந்தார் என்பது நிதர்சன உண்மையாகும்.

நான் கற்ற தோப்பூர் மகாவித்தியாலயத்தில் அவரது சகோதரர் திரு. செல்வநாயகம் அவர்கள்" எனது வகுப்பு நண்பராக இருந்தார். இடைக்கிடை நண்பனை சந்திக்க அவரது இல்லம் சென்று வருவதை நான் வழக்கமாகக் கொண்டிருந்தேன். அவரது தாயாரின் விருந்தோம்பல் பண்புகளால் நான் பெரிதும் ஈர்ப்புக் குள்ளானேன். நண்பனுடன் வீட்டினுள் சென்றிருந்த ஒரு நாள் அவரின் மூத்த சகோதரரான கனகரெத்தினம் ஐயாவினது அறையினுள் பல புத்தகங்கள் நிரம்பிய இராக்கையை கண்ணுற்றேன். அப்போது 09 ஆண்டில் கல்வி பயின்று கொண்டிருந்த நான் அப் பருவத்தில் குறிப்பாக சித்திரக் கதைப் புத்தகங்கள், மர்ம நாவல்கள், துப்பறியும் நாவல்களை வாசிப்பதில் பேரார்வம் கொண்டிருந்தேன். நம்பிக்கையில் நண்பனிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபற்றி விசாரித்தவேளை அவை அனைத்தும் தனது மூத்த சகொதரன் அவர்களுடையது எனத் தெரித்து என்னை வெளிவிறாந்தைப் பகுதியில் அமர்ந்திருந்த அண்ணன் ஆகிய ஆசான் கனகரெத்தினம் ஐயாவிடம் அழைத்தச் சென்று அறிமுகம் செய்து எனது விருப்பார்வம் பற்றி அவரிடம் எடுத்துரைத்தார். ஐயா அவர்கள் அன்புடன் தன்னருகே எனை அழைத்து அமரத்தி எவ்வாறான கதைப் புத்தகங்களை வாசிப்பதில் நான் ஆர்வம் கொண்டுள்ளேன் என்பது ஆறுதலாகப் பொறுமையுடன் விசாரித்து அறிந்து கொண்டதோடு மாத்திரமன்றி அத்தகைய கதைப் புத்தகங்களைத் தவிர்த்து டாக்டர் மு. வரதராசன், கல்கி அகிலன், பார்த்தசாரதி போன்ற நாவலாசிரியர்களது கதை நூல்களை வாசிப்பது தமிழ் மொழியறிவினைப் பெருக்கும் என்றும் அதன் மூலம் தமிழ்ப் பாடத்தில் இலகுவாக சித்தியடைய அது வழிகோலும் எனவும் கூறியதோடல்லாமல் தானே சென்று டாக்கடர் மு.வரதராசன் அவர்கள் எழுதிய இரு நூல்களையும் கொணர்ந்து தந்து இவைகளை வாசித்து முடித்தபின் மீளத் தந்து தன்வசமுள்ள பிற கதை நூல்களையும் பெற்றுக் கொள்ளுங்கள் என அன்போடுரைத்தார்.

அன்று ஐயா அவர்கள் எனதுள்ளத்தில் ஏற்றிய அறிவுரையைப் தொடர்ந்த பின்பற்ற ஆரம்பித்த நான் பிற்காலத்தில் எனது பாடசாலைக் கல்வியிலும், வாழ்க்கையின் பல துறைகளிலும் மேன்மையுற அது பேருதவியாக அமைந்தது. மிகச் சிறந்த குண நலப் பண்புகளுடன் கூடிய, மனித நேயமிக்க, கல்விப் பெருந்தகை கனகரெத்தினம் ஐயா, அவர்கள் மறைந்தாலும் பல்லாயிரவர் உள்ளங்களில் இன்றும் மறையாது வாழ்ந்து வருகின்றார் என்பதுவே பேருண்மையாகும். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பை.மு. முகம்மது சாபிர்
தோப்பூர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. ஆறுமுகம் கனகரெட்ணம் அவர்களுடனான நேர்காணல்

(மட்/ஆசிரியர் கலாசாலை மாணவரின் நேர்காணல்)

01. உங்களைப் பற்றிய ஓர் அறிமுகம் தரமுடியுமா?

**அறிமுகம்** : ஆறுமுகம் கனகரெட்ணம்

**ஆரம்பக் கல்வி கற்ற பாடசாலைகள் :**

03 வகுப்பு வரை - தி/ பள்ளிக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை

03ம் வகுப்பிலிருந்து 06ம் வகுப்பு வரை -

தி/ புனித அந்தோனியார் மகா வித்தியாலயம்

06ம் வகுப்பிலிருந்து எஸ்.எஸ்.சி வரை -

தி/இந்துக் கல்லூரி, திருகோணமலை

**உயர்தர பாடசாலை தராதரப் பத்திர வகுப்பு (H.S.C) :**

மட்/வந்தாறுமூலை மத்திய கல்லூரி

**ஆசிரியர் நியமனத் திகதி** : 1961.05.02

**முதல் நியமனம் பெற்ற பாடசாலை** :

தி/நல்லூர் அ.த.க. பாடசாலை, தோப்பூர்

**ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்றது :**

08.01.1963 - 01.01.1965

மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த பள்ளிக்குடியிருப்புக் கிராமத்தில் ஆறுமுகம் தங்கப்பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வனாகப் பிறந்தேன். ஆரம்பக் கல்வியையே சரிவரப் பெறமுடியாத அந்நாளில் கல்லூரி வரை என்னை கற்பித்த எனது தந்தை போற்றுதற்குரியவராவார். எனது தந்தையின் பாரிய நோயினால் எனது பல்கலைக்கழக புகுமுக வகுப்பு தடைப்பட்டது. இருந்தும் அரச சேவையில் ஆசிரியனாகும் வாய்ப்புக் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. உங்களுடைய ஆசிரியத்துறை அனுபவத்தைக் கூறமுடியுமா?**

ஆசிரியர்கள் என்பவர்கள் இறுதிவரை கற்றுக்கொண்டே இருக்க வேண்டியவர்கள். உலகனுபவங்கள் மிக்கவர்கள் சர்வகலா வல்லவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் சமூகம் குறிப்பாக அவர்கள் கற்பிக்கின்ற மாணவர்கள் ஆசிரியர்களிடம் இந்த குறியை எதிர்பார்க்கின்றார்கள். எனக்கு கற்பித்த ஒவ்வொரு ஆசிரியர்களையும் எண்ணிப் பார்க்கிறேன். அவர்களிடம் எந்தப் பாடத்தையும் கற்பிக்கும் ஆற்றல் இருந்தது.

ஆசிரியர் நேரம் தவறாதவராக நல்ல பண்பாடுடையவர்களாக சிறந்த வழிகாட்டியாக இருக்க வேண்டும். எந்தவொரு நற்சான்றிதழ்களையும் விட மாணவர்கள் வழங்கும் "நல்ல ஆசிரியர் என்ற சான்றிதழையே நான் மிகவும் பெறுமதி மிக்கவராகக் கருதுகின்றேன்.

**03. மட்/அரசினர் ஆசிரியர் கலாசாலையில் நீங்கள் பெற்ற அனுபவங்களைக் கூறமுடியுமா?**

எத்தொழிலிற்கும் முன்பயிற்சியும், தொழிலைப் பற்றிய முன்னறிவும் அவசியமாகும். ஆசிரியர் கலாசாலையில் இவை இரண்டையும் பெற்றது எனது முக்கிய அனுபவம். "பாங்குடன் பயின்று பண்பாடெய்துக" எனும் எமது கலாசாலையின் குண நலங்களுடைய நண்பர்களுடன் அன்பாக, ஒற்றுமையாக, சந்தோஷமாக இரண்டு வருடங்களை கடத்திய அனுபவம் நினைக்க நினைக்க இனிமை தருகிறது.

அதிபர், விரிவுரையாளர்கள், கலாசாலைக்கு வருகின்ற பெரியோர்கள், அறிஞர்களின் அறிவுரைகள் பசுமரத்தாணிபோல் என் மனதில் உள்ளன. கலாசாலையின் அதிபர்கள், விரிவுரையாளர்கள் முதல் சிற்றூழியர்கள் வரை குறித்த நேரத்தில் குறித்த வேலைகளைச் செய்து முடிப்பர். கலாசாலையில் நான் பெற்ற அந்த அரிய அனுபவம் இன்று வரை எனது வாழ்வு சீராய் அமைய பெரிதும் உதவுவது நான் பெற்ற பாக்கியமாக கருதுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மட்/அரசினர் ஆசிரியர் கலாசாலை பற்றிய மறக்க முடியாத அனுபவங்கள் பற்றி கூறமுடியுமா?**

1963ம் ஆண்டு ஜனவரி மாதம் கலாசாலையில் காலடி எடுத்து வைத்த நாளினையும் 1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் கலாசாலையை விட்டு வெளியேறிய நாளினையும் இன்றும் மறக்க முடியவில்லை.

1963ம் ஆண்டில் பரீட்சையில் சித்தியெய்தியோர் பட்டியலில் நான் முதலிடம் பெற்றதையும் என்னைத் தெரியாத ஆசிரிய மாணவர்கள் கூட என்னைக் கைலாகு செய்து வாழ்த்தியமையும் என்றும் மறக்க முடியாது.

இவற்றிடையே கலாசாலை நிகழ்வுகளான புதுமாணவர்களை வரவேற்றல், அதிபர், விரிவுரையாளர்களிற்கான பிரியாவிடை விளையாட்டுப் போட்டியில் வீரர்களை உற்சாகப்படுத்தல் வாழ்த்துதல், சுற்றுலா செல்லுதல், சாரணர் பாசறை நிகழ்வுகள் என மிகவும் இனிமையான நிகழ்வுகளை மறக்க முடியவில்லை.

கலாசாலையில் கடமையாற்றிய கல்விசாரா ஊழியர்களின் கடமையுணர்வு அவர்கள் எங்களோடு பழகிய விதம் ஈற்றில் பரீட்சை முடிவுகள் வெளியான போது நான் எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்தமையைக் கண்டு மிகவும் சந்தோசம் அடைந்தேன். கலாசாலையில் அனுபவித்த அனைத்து நிகழ்வுகளும் என்றும் மறக்க முடியாத இனிய நினைவுகளேயாகும்.

இடம்பெயர்ந்து மட்டக்களப்பில் இருக்கும் நான் எனது ஆசிரிய கலாசாலை நண்பர்களைத் தேடிக் கண்டு சந்தோசிப்பதில் ஆர்வமாயிருக்கிறேன்.

**5. மட்டுநகர் ஆசிரியர் கலாசாலை எதிர்காலத்தில் எவ்வாறு அமைய வேண்டும் என இக்கலாசாலையின் பழைய ஆசிரிய மாணவர்கள் நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்.**

பாடசாலைகள் பல்கலைக் கழகங்கள் என்பன சிறப்பாக தொழிற்பட பௌதீக வளங்களும் ஆளணி வளங்களும் மிக அவசியமாகும் நில வளம் மிக்க மட்டக்களப்புப் பிரதேசத்தில் தற்போதைய இடத்தை அப்போது ஏன் தெரிவுசெய்தார்கள் என்பது புரியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிரத பாதையோரமாக குடியிருப்புகள் அற்ற விசாலமான காணிகள் அப்போது இருந்தன. கலாசாலையை நவீனப்படுத்துவதற்கான ஆளணி வளம் தற்காலத்தில் ஓரளவு நிறைவேற்றப் பட்டிருந்தாலும் இடவசதி போதாததாக காணப்படுவது மனக் கவலையாக உள்ளது.

முக்கியமாக விளையாட்டு மைதானம் அவசியமாக காணப்படுகின்றது. ஏனைய ஆசிரிய கலாசாலைகளுடன் ஒப்பிடும்போது எமது கலாசாலையே குறுகிய நிலப்பரப்பிலுள்ளது. குண்டுச்சட்டியில் குதிரையோட்டுவதை விட விசாலமான இடத்தில் புதிய மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை அமைய வேண்டும் எனவும் வளர்ந்து வரும் தொழினுட்ப உலகத்திற்கேற்ப ஆசிரியர்களை வெளியேற்றுவதன் மூலம் எமது இளம் சமுதாயம் வளர்ந்து தரமான சமூகத்தை கட்டியெழுப்புவார்கள் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### 6. உங்களது பிரதேச சிறப்புக்களைச் சுருக்கமாக கூற முடியுமா?

திருகோணமலை மாவட்டத்திலே மூதூர்த் தொகுதியின் கண் அமைந்துள்ள மருத மண்ணான பள்ளிக்குடியிருப்பு எனும் கிராமத்தினையே நான் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டுள்ளேன்.

வடக்கே தென்னை மரவாடி தொடக்கம் தெற்கே வெருகல் வரை நீண்ட கடற்பிரதேசத்தையுடையது திருகோணமலை மாவட்டமாகும். அது மட்டுமின்றி உலகச் சிறப்பு வாய்ந்த இயற்கைத் துறைமுகம் மற்றும் இதிகாச காலம் தொடக்கம் இற்றை வரை வரலாற்றுச் சிறப்புமிக்கதாகத் திகழும் திருஞானசம்பந்தர், அருணகிரி நாதர் ஆகியோரால் தலப் பதிகம் பாடப்பெற்றதுமான திருக்கோணநாதர் சமேத மாதுமையம்பாள் எழுந்தருளியிருக்கும் திருகோணேச்சரமும், மகாவலி கங்கையும், கன்னியா வெந்நீரூற்றும் என பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு விளங்கும் இதன் தெற்கே மூதூர்த் தொகுதி அமைந்துள்ளது.

இந் நேர்காணல் மூலம் ஆசிரியத்துவம் வரலாறு எதிர்கால தொலைநோக்கு பற்றிய அவரின் சிந்தனைகளை துல்லியமாக அறியமுடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

*கண்ணுக்கு ஒளியாய், நெஞ்சத்தில் நினைவாய்*

*நிலையாய் என்றும் எங்களோடு*

*எங்களின் இறைவனாய் – என்றும்*

*எங்களை வழிநடாத்த வணங்குகின்றோம்...*

**நீங்கா நினைவில் ...**

**பாடசாலைச்சமூகம் - தி/மூ/ சேனையூர் மத்திய கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் என்றும் உங்களை ஞாபகம் வைத்திருக்கும்

கனகரெட்ணம் சேர். ஆசிரியம் என்ன என்பதை செருப்பு அணியாத வேட்டிக்கரை மறைக்காத நீளக்கால்களால் நடந்து வாழ்ந்து காட்டிய மனிதன்.

**ஒரு தலை தடவலில் ஒரு மெல்லிய முதுகு தட்டலில் தன் அத்தனை நேசத்தையும் கொட்டிய ஆசான்கள் கிடைத்த அதிர்ஷ்டக்கார மாணாக்கர்கள் நாங்கள். யுத்தமும் வறுமையும் வாழ்வை சிதைத்தழித்த நாட்களில் மரணம் வாசல் படியில் படுத்து காத்துக் கிடந்த நாட்களில் கவனச் சிதைவு தடுத்து பாடசாலை ஓடிச்சேர இவரைப் போன்ற ஒரு ஆசான் கிடைத்த பாக்கியசாலிகள் நாங்கள்.**

எப்போதாவது கனகரெட்ணம் சேர் என்னை கண்டித்தாரா என இன்று முழுவதும் என் ஞாபகக் கூட்டை நோண்டிக்கொண்டே இருக்கிறேன். அன்பையும் நேசத்தையும் நல்ல தமிழையும் தவிர அவர் எதனையும் வெளிக்காட்டியதாய் ஞாபகமே இல்லை.

எப்போதுமே பாசத்திற்குரிய மாணவர்கள் நீங்கள் என்று பெருமையாக கூறுவார். இறுதியாக அவரை சந்தித்த போது எங்களை மறந்து விட்ட முதுமை கால வாழ்வில் இருந்தார். தனது பாடசாலைக் காலம் ஆசிரிய ஆரம்ப காலங்கள் பற்றி நிறைய சொன்னார். "நீங்கள் என்னைப் பார்க்க வந்திருக்கிறீர்கள். நான் நினைக்கின்றேன் நான் ஏதோ உங்களுக்கு செய்திருக்கிறேன்" என்று தனது மறதியை நியாயம் செய்தார். நீங்கள் செய்தவை தான் சேர் இன்று வரையும் எங்களை அசைத்தோடும் அறிவுச் சேர்வை. எழுத்துப்பிழை செய்யாத தமிழை இன்று வரையும் எழுத வைத்துக் கொண்டிருப்பது நீங்கள் தந்த தமிழே.


**போய் வாருங்கள் சேர். காலம் உங்களை என்றும் ஞாபகம் வைத்திருக்கும். துயரில் நாங்களும் பங்கு கொள்கிறோம்.**

திருநாவுக்கரசு கோபகன் PHI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி/பள்ளிக்குடியிருப்பின் "கொம்பு விளையாட்டு" நிகழ்வின்போது
கோயில் நிர்மானிக்கப்பட்டு அதற்கான - வரலாற்று ஆவணப் படமும்
சிவ சக்தி அம்மன் நிலையும் அவரால் வைக்கப்பட்ட நிகழ்வில் அவரது
இளைய தம்பி ஆறுமுகம் நேசதுரையுடன் (சிறினியுடன்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியண்ணன்

என்றும் எம் நினைவுகளில்
நிலைத்திருக்கும் எங்கள் பெரியண்ணன்
தந்தையை இழந்து நான்கு வயதில்
தாயுடன் எமை வளர்த்த
பெருந்தகை என் பெரியண்ணன்

சிறுவயதில் டோச் லைட்டில்
விளக்கு கரிபிடித்து அதில் எழுதி
சுவரில் டோச்சடித்து
எழுத்து கற்பித்ததை என்றும் மறவேன்...

அப்பாவின் விவசாயத்தை - தொடர
அம்மாவின் தம்பியர்களின்
அம்மாச்சிமாரின் துணையுடன்
மாட்டுப் பட்டிகளையும் வயல்களையும்
பராமரித்தும் எம்மை கற்பித்தும்
நல்வழிப்படுத்திய எங்கள் பெரிய அண்ணனை
என்றும் மறவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோப்பூர் அல்-ஹம்றா ம.வி திலும் - சேனையூர் ம.வி
கல்வியை தொடர வளிகாட்டினீர்...
அன்பும் பாசமும் பயிற்சியும் ஊட்டிய
உங்கள் பேச்சுக்கு மறு பேச்சில்லை
வாழ்நாளில் நேருக்கு நேர் - பெரிதாக பேசியதில்லை
அறிவுரைகளும் ஒரு தரம் தான்...

இறுதிக்காலத்தில் எங்களிடம் வந்து
தேனீர் அருந்தி பல பழைய கதைகள்
எதிர்காலத்திற்கான அறிவுரைகள் கூறி...
என்னை - வரதன் வீட்டிற்கு
ஏற்றிச் செல் சிறினி என்பீர்கள்
உடன் மகிழ்வாக ஏற்றிச் செல்வேன்...

என்றும் பக்தியுடனும் பணிவுடனும்
வாழ்ந்த நாட்கள் வராதோ...

ஆறுமுகம் - நேசதுரை (சிறினி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது மூத்த அண்ணா

தாய் வயிற்றில் முதலாவது
உறவாக தரணி போற்ற உதயமானாய்
எங்கள மூத்த அண்ணா
என் முன் பிறந்து
என் முன் சென்றுவிட்டாய்
பெரிய அண்ணா அண்ணா என்று
ஆயிரம் முறை சொல்வேன்
இனி யாரை எப்போது சொல்வேன்

அன்பின் வடிவானவரே
அருமை உள்ளமானவரே
அறிவின் திருவுருவாய் வலம் வந்தவரே
அமைதியே எந்தன் குணமானவரே
எங்கள் அண்ணா

திருமலையிலிருந்து வந்து
நின்முன் நிற்கையில் - பார்த்து
கண்கலங்கி நேரிய பார்வையுடன்
இவ்வுலகை விட்டேகிய
நினைவுகள் விழி அருகே
சிறு துளியாய் வழிந்திருக்கும் போதெல்லாம்
இதயத்தின் பட படப்பாய் செவிகளில்
ஓர் இசையாய்
மூச்சின் காற்றாய்
என்னுள்ளத்தில் என்றும்
வாழ்ந்திடுவீர் அண்ணா
எங்கள் மூத்த அண்ணா
என் மனம் பொறுக்குதில்லேயே
உங்கள் நினைவால் வாடுகிறேன்.

திருமதி. தங்கரெட்ணம் நாகராசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தியின் தத்துவக் கருத்துக்களும் திரு. ஆ. கனகரெட்ணம் அவர்களின் வாழ்வியலும்

கீழைத்தேச கல்வித் தத்துவவியலாளராக போற்றப்படும் காந்தியடிகளின் பல தத்துவ சிந்தனை வெளிப்பாடுகளுடன் அண்ணன் திரு.ஆ.கனகரெட்ணம் அவர்களின் வாழ்வியல் அமைந்துள்ளமையை ஆய்வுக்குட்படுத்தும்போது... பல பல விடயங்களில் கற்றலின் - வாசிப்பின் பயனைக் காணலாம்.

## மகாத்மாவின் 3H கல்விச்சிந்தனை

கற்போர் Head, Hand, Heard எனும் தலை, கை, இதயம் என்பன விருத்தியாக்கப்பட வேண்டும் எனும் கொள்கை தெரிவிப்பது.

1. Head - தலை - Knowledge அறிவைப் பெறவேண்டும்.
2. Hand - கை - Skills ஆற்றல் - திறன்களை
3. Heard - இதயம் - Attitude மனப்பாங்கு

**என்பன ஒவ்வொரு மாணவரிடத்திலும் விருத்தியுற வேண்டும் என்பது இவற்றில் திரு. ஆ. கனகரெட்ணம் அவர்களிடத்தில் ...**

அறிவு : பாடசாலை கல்வியுடன் முறைசாராக் கல்வி, விழுமிய கல்வி, திருக்குறள், தத்துவவியல், உளவியல், கலைகள் என பல வகையான நூல்களை வாசித்து கற்றுணர்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல் : கற்பிக்கும் திறன், விளையாட்டு, வாசிப்பு, பாடகர், கலை, கதை, விவசாயி, சமூக, விழுமிய பண்பாடு போன்ற பல்திறன் உடையவர்.

மனப்பாங்கு : எளிமை - காந்திய உடை வெள்ளை உடை, அமைதி, அடக்கம், நேர்மை, உண்மை, உதவுதல், பெற்றோரை மற்றோரை பராமரித்தல், சமூகத்தின் மேம்பாட்டுக்கு உதவுதல், சமூக நீதி, சமூக விழுமியங்களை நிறைவு செய்தல், முதலான பல நல்மனப்பாங்கான விடயங்களில் முன்மாதிரியாக நடந்து கொண்டமை.

**இவை அனைத்தும் காந்தியடிகளின் 3H எனும் கல்விக் கொள்கையை முழுமையாக வாழ்வில் கடைப்பிடித்தமை ஆசிரியத்தில் வெளிப்படுத்தியமை அவரது வாழ்வியலில் காணலாம்.**
**இவ்வாறேபின்வரும்காந்தியடிகளின்பொன்மொழிகள்ஒவ்வொன்றிலும் அன்னாரின் வாழ்க்கைப் பாங்கைக் காண முடிகின்றது. இவ்வுலக வாழ்வு காந்தியமாகவும் அமைந்தமை பெருமைக்குரியது.**

## காந்தியடிகளின் பொன்மொழிகளிற் சில ....

- எளிமையான வாழ்க்கை என்ற விருப்பத்திலிருந்து மாறும் மனிதனுக்குத் தேவைகள் அதிகரித்துவிடுகின்றன. இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் மனநிலைதான் மனிதனுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.
- எல்லாவற்றுக்கும் அறம்தான் அடிப்படை. அந்த அறத்துக்கே உண்மைதான் அடிப்படை.
- தன் சக மனிதனின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுபவனே சிறந்தவனாகக் கருதப்படுகிறான்.
- நீ எந்தவிதமான உலகத்தைப் பார்க்க விரும்புகிறாயோ, அதுபோலவே நீ மாறு.
- ஒருவனிடம் துக்கமும், தூக்கமும் எப்போது குறையுமோ, அப்போதே அவன் மேதையாகிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனதில் தீயவற்றைச் சிந்திப்பவன், தீயச் செயல்களைச் செய்பவன் போன்றவனே... சிந்திப்பவனை விடச் செய்பவன் மோசமானவன் அல்ல...
- மற்றவர்களை, கெட்டவர்கள் என்று சொல்வதன் மூலம் நாம் நல்லவர்களாகிவிட முடியாது.
- இந்த உலகத்துக்கு அமைதியைப்போதிக்க விரும்பினாலும், உண்மையான போருக்கு எதிரான போரைத் தொடங்க வேண்டுமென்றாலும், அதைக் குழந்தைகளிடமிருந்துதான் தொடங்க வேண்டும்.
- எது முழுமையானதாகவும் உண்மையானதாகவும் இல்லாமல் இருக்கிறதோ, அதை எந்தப் பெயர்சொல்லி அழைப்பதிலும் பயனில்லை.
- வன்முறையை விரும்பும் மனிதர்கள் பிற வன்முறையாளர்களால் மட்டும் கொல்லப்படுவதில்லை. அவர்கள் மேற்கொண்ட கொள்கையால்தான் கொல்லப்படுகின்றனர்.
- ஒரு தியாகிபோலச் சாக, நமக்கு வீரம் வேண்டும்: அதற்காக, தியாகியாக வேண்டுமென்ற வெறி யாருக்கும் இருக்கக்கூடாது.
- எல்லா நீதிமன்றங்களையும் விட உயர்ந்தது மனசாட்சி எனும் நீதிமன்றம்தான். அது, எல்லா நீதிமன்றங்களுக்கும் மேலானது.
- ஒரு கலாசாரத்தை அழிப்பதற்காக, அதன் நூலை அழிக்காதீர்கள். அதை, மக்கள் படிக்கவிடாமல் செய்யுங்கள் போதும்.
- நம்பிக்கை, காரணத்துடன் இருக்கவேண்டும்: குருட்டாம்போக்கு நம்பிக்கை எளிதில் மறைந்துவிடும்.
- ஒரு மனிதரின் குறிக்கோளில் எந்தக் கணத்தில் சந்தேகம் ஏற்பட்டுவிடுகிறதோ, அந்தக் கணமே எல்லாமே கறைபட்டுவிடும்.
- இந்த உலகில் மனிதனின் தேவைக்குப் போதுமான அளவு வளமுள்ளது. அவனின் பேராசையளவுக்கு வளங்கள் இங்கில்லை.
- அரசியலுக்கும் மதத்துக்கும் சம்பந்தமில்லை என்று தெரிவிப்பவர்களுக்கு மதம்பற்றி ஒன்றும் தெரியாது.
- நேரான பாதையிலிருந்து விலகியவன் ஒருபோதும் தன் இலக்கை அடையமாட்டான்.

ஆறுமுகம் செல்வநாயகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணனின் வாழ்வியலில்... அனுபவப் பகிர்வுகளில் சில...

இளமைக் காலம் தொடக்கம் பாடசாலை காலத்திலும் பின்னரும் தொடராக மாதாந்த சஞ்சிகைகளான கல்கி, ஆனந்த விகடன், குங்குமம், பத்திரிகைகள், கலைக்கதிர், சிரித்திரன் முதலான புத்தகங்களை தொடர்ந்து வாசிக்கின்ற பழக்கமுடையவர்.

1961, 62 காலத்தில் தந்தையார் கொழும்பில் வைத்திசாலையில் இருந்த வேளை கொழும்புக்கு செல்வதற்கு முப்பது ரூபாயில் (30/-) ஐந்து ரூபாவுக்கு (5/-) இப்புத்தகங்களை வாங்கலாம் என்றும் மாதம் நூற்று ஐம்பது ரூபா (150/-) சம்பளத்தில் மாதாந்தம் இவ்வாறான இலக்கிய புத்தகங்களை வாங்கியதாகவும் தனது வாசிப்பை பற்றி மரணத்திற்கு ஒருமாதத்தின் முன் கூறினார்.

எழுத்தாளர்களான கல்கி, மு. வரதராஜன், சாண்டில்யன், பாரத்தசாரதி, ஜெயக்காந்தன் முதலானோரது புத்தகங்களிலும் மூழ்கியிருப்பார்.

எனது தோப்பூர் நண்பர்கள் P.M. சாபீர் A.O, பேராசிரியர் பளீல்ஹக் ஆகியோர் பள்ளிக்குடியிருப்பு அண்ணன் வீட்டிற்கு வந்து வாசிப்பு புத்தகங்கள் பெறுதல் சம்பந்தமாக பேசுவார்கள். அவர்கள் முன்பு துப்பறியும் நாவல், பேசும்படம் புத்தகங்கள் படித்ததாகவும் - அண்ணனின் சந்திப்பிற்கு பின்னர் - கல்கி, ஜெயக்காந்தன், பொன்னியின் செல்வன் முதலான புத்தகங்களை வாசிக்கும் பக்கம் திரும்பியதாகவும் கூறுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உண்மை நட்பை உணர்ந்தேன்...**

திருகோணாமலை ஓய்வு நிலை அதிபர் சுகயீனமுற்றிருந்தார். இவர் அண்ணனுடன் முதல் நியமனம் நல்லூர் பாடசாலையில் கிடைத்து தொடர்ந்து ஆசிரியத் தொழிலில் ஒனற்றாக பயணித்தவர்கள். ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஓய்வின் பின்னர் சுகயீனமுறறிருந்தார். தனது புதல்வர்களையும் யுத்தத்தில் இழந்தவர். மனைவியுடன் அன்புவழிபுரத்தில் வாழ்ந்தனர். நீண்ட காலமாக யாருடனும் பேசுவதில்லை - யாரையும் யாரெண்டு மதிப்பதுமில்லை. ஆட்களையும் மதிக்க முடியாத ஞாபகங்கள் அற்ற நிலையில் படுக்கையிலேயே நீண்ட காலமாக பேச்சற்ற நிலையில் இருந்தார்.

அண்ணன் திருமலை வந்தால் பழைய நட்புகள் உறவினர் வீடுகளுக்கு மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லக் கேட்பார். கோணமலை அண்ணன் வீட்டிற்கும் செல்றோம். சென்றதும் அவர் மனைவி உபசரித்து - கோணாமலை அவர்களிடம் கூறுவார். உடனே அவர் "கனகர் வா இரு" என்பார். பெரிய அதிசயமாக அவர் மனைவி என்னிடம் "தம்பி 5.6 வருடமாக ஒரு சொல் கூட கதைக்காதவர் கனரெட்ணம் அண்ணன் வந்தால் மாத்திரம் "கனகர்" என்கிறாரே என அழுதார். உள்ளத்தில் ஊறிய நட்புக்கு இலக்கணமானவர்கள்.

கோணாமலை அண்ணன் "யாருடன் வந்தாய்" என அண்ணனிடம் கேட்க என்னைக் காட்டி தெரியுமா? என்றார் உடனே "செல்வம் - விபுலாந்தா" என்றார். எனக்கும் அழுகை வந்தது. கையசைத்தார்.

அவரது மரணச் செய்தி கேட்டு அண்ணனுடன் சென்றோம். இரங்கலுரையாற்றியவர்கள் கோணாமலை பேசுவது - கனகரெட்ணத்துடன் தான் என்றனர். அண்ணனும் இரங்கலுரை ஆற்றினார் உருக்கமான நட்பைப் பிரதிபலித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடவர்மலை தி/விவேகானந்தா கல்லூரிக்கு என்னுடன் வந்தார். மாணவர் விடுதியையும் பார்ப்போம் என அழைத்துச் சென்றேன்.

மாணவர்களை சந்தித்தார். மாணவர்களுடன் கலந்துரையாடும்போது அவர்களைப் பற்றி அறிந்து கொண்டு - உளவியல் ரீதியாகவும் - பண்பியல் ரீதியாகவும் ஆலோசனைகளை வழங்கினார்.

தனது வந்தாறு மூலை மாணவர் விடுதி பற்றியும் அப்போது அங்கிருந்த வளங்கள் நடைமுறைகளையும் விளங்கப்படுத்தி திசைக்கோட்படுத்தினார்.

இந்த மாணவர் விடுதியில் இருக்கும் பௌதீக வளங்களை அம்மாணவர்களுக்கு கூறினார். கட்டில், கபேட், நூலகம், குழியலறைகள் வசதிகள் சாப்பாட்டிடம் முதலான பல வளங்களை கூறியும் இவ்வாறு பல வசதிகளுடன் குறைந்த செலவில் நீங்கள் கற்க கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்துங்கள் என்றும் பாடங்களுக்கு மேலாக வாசியுங்கள் - விளையாடுங்கள் எனவும் பெற்றோரை மகிழ்விப்பதே உங்கள் செயலாக அமைய வேண்டும் என பல விடயங்களைக் கூறி காரியாலயத்திற்கு வந்தார்.

அந்த மணாவர்கள் அனைவரும் அவர் பின்னால் வந்து வழியனுப்பி வைத்தார்கள். எனக்கும் இம்மாணவர்களுக்கு பெற்றார் கவனிக்கும், விரும்பும் விடயங்களை நிறைவு செய்து கொடுக்க வேண்டுமென கூறினார்.

மாணவர் விடுதி மாணவர்களுக்கு உள்ளக விளையாட்டுக்களும், உடற்பயிற்சி கண்காட்சிக்கான பயிற்சியும் கொடுத்து மாவட்ட, மாகாண, அகில இலங்கை சாதனைகள் அவர்கள் சாதனை புரியவும், கிராமப்புற மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பும் ஏற்பட அவரது வருகை அமைந்திருந்தது பெருமைக்குரியது.

**கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் முதன்மை நிலையில் சித்தியடைந்தமையை அறிந்து சந்தித்து கலந்துரையாடினார். "கல்வித்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துறையில் கல்வி அதிகாரிகளாக கடமையாற்றுவதை விட ஆசிரியராக - விரிவுரையாளராக, ஆசிரியப் பயிற்சி கலாசாலை அதிபராக இருப்பது பயன்மிக்கது."**

ஆசிரிய பயிற்சி கலாசாலை அதன் செயற்பாடுகள் சிறந்த சமூக உருவாக்கத்திற்கு உதவக்கூடியது. ஆசிரியப் பயிற்சி கலாசாலை அதிபராவது நல்லது... என ஆலோசித்தார். கோள் பண்ணினால் விணப்பிப்போம்... என கூறினேன்.

**தேசிய கல்வி நிறுவனத்தில் பட்டப்பின் டிப்ளோமா** - PGDE கற்கை நெறிக்கு "மாவட்ட இணைப்பாளர்" பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. விண்ணப்பித்தேன் நேர்முகப் பரீட்சையிலும் வெற்றி கிடைத்தது PGDE க்கு மாவட்ட பொறுப்பாகவும் விரிவுரையாளராகவும் கிடைத்து. அத்துடன் BEd கற்கநெறிக்கு விரிவுரையாளராகவும் கிடைத்தது. மகிழ்வாக சிறப்பாக செய்து வருகிறேன். சந்திக்கும்போது இவை விடயமாக கூறினேன். அவரது விருப்பத்தையும் நிறைவு செய்தேன். மகிழ்ந்தார்...

**வெளிநாட்டு புலமைப்பரிசில் புது டில்லி - இந்தியா, தேசிய கல்வி நிறுவகம், லண்டன் "வேமின்காம்" பல்கலைக்கழகம் கிடைத்து செல்லும்போது அவரிடம் கூறச் செல்லும்போது பல விடயங்களை கூறுவார்.** பெரிய அதிசயம் இவ்விடயங்கள் புலமைப்பரிசிலில் இடம்பெறும் அம்சங்கள் எல்லாம் தெளிவாக கூறுவார். அப்படியே அங்கு இருக்கும் எவ்வளவு புதுமைகள், புதிய விடயங்களையெல்லாம் அறிந்து வைத்திருந்தார்.

லண்டனில் "சேக்ஸ்பியர்" ஆங்கில நாடக இலக்கிய எழுத்தாளரின் பிறந்த இடத்திற்கும் சென்றோம் என்றேன். உடனே "சதன்பூட்"க்கா எனக் கேட்டார். எனக்குத் தெரியாது சேக்ஸ்பியரின் பிறந்த இடத்தின் பெயரை அவர் குறிப்பிடுகிறார்.

சேக்ஸ்பியரின் ஆங்கிலப் புத்தகங்களை வாசித்தமையும் ஒருவர் எழுதிய பயணக் கட்டுரையிலும் இப்பெயரை அறிய முடிந்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறினார். வாசிப்பதனால் பல விடயங்களை அறிய முடியும் என்பதே.

எமது கலைமகள் இந்துக்கல்லூரியில் ஒவ்வொரு ஆண்டும் 40 - 50 மாணவர்கள் க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள். இவர்களில் 15 மாணவர்களை விஞ்ஞான/கணித பிரிவிக்கு தயார்படுத்தி ஆரம்பிக்கலாம். அர்ப்பணிப்பான ஆசிரியர்களையும் - மேலதிக கற்றலுக்காக தனியார் - நிறுவன உதவிகளையும்பெறலாம். முயற்சித்தால் வெளியில் சென்று படிக்க முடியாத பிள்ளைகளுக்கு உதவலாம் முயற்சிக்க வேண்டும். 1992ல் இருந்து 1C பாடசாலையாக இருக்கிறது. 1AB பாடசாலையாக்க வேண்டும்.

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் சேர்க்க முயற்சித்தேன் இறுதி நேரத்தில் தடங்கல் ஏற்பட்டது. தொழில் நுட்பப்பிரிவை ஆரம்பிக்கலாம் முயற்சிக்கிறேன் என்றேன். அதிபர்கள் முயற்சிக்க வேண்டும். இவ்வாறு எதிர்கால சமூகம் பற்றிய பல சிந்தனைகள் அவரிடம் இருந்துகொண்டே இருந்தது.

ஓய்வின் பின்னரும் நூலகங்களுக்கு செல்லும் வழமை இருந்தது. மாலையில் சேனையூர் நூலகத்திற்கு செல்வார். திருகோணமலையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை வார வெளியீடு பத்திரிகைகளை எப்படியாவது அனுப்பி வைப்பேன்.

பாலர் பாடசாலையை - பிற்பகலில் நூலகமாக வைத்திருந்தோம். பாடசாலை நூலகத்தையும் சிறப்பாக இயக்கினோம்.

கம்பரலிய திட்டத்தில் திரு. இரா. சம்பந்தன் அவர்களால் 50 இலட்சம் நூலகத்திற்காக ஒதுக்க ஏற்பாடாகியது. கீழ்த் தளத்தை முதல் முடித்து பின்னர் மாடியை முடிக்க திட்டமிருந்தது. இவ்விடயமாக மகிழ்வான ஆலோசனைகளை வழங்கினார்.

ஆட்சி மாற்றத்தால் முடியாது போனது முக்கியமான பல நல்ல செயற்பாட்டிலும் ஆக்கபூர்வமான நல்ல அறிவுரை ஆலோசனைகளையும் நீண்ட தூரநோக்கு சிந்தனையுடனும் செயற்பட்டமைகள் என்றும் மறக்க முடியாதவைகள்.

**ஆ. செல்வநாகயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

வளநகர் திருகோணமலை
வாழ்ந்திடும் மூதூர் தனில்
திருநகர் கிராமமான
சிறப்புறு பள்ளிக்குடியிருப்பில்
பிறந்தார் நல் கனகரெட்ணம் ஐயா,

ஆறுமுகம் தங்கப்பிள்ளை
அன்போடு சேர்ந்து ஒன்றாய்
ஈன்றிட்ட மூத்த மகவு
இனிதென வளர்ந்ததன்று

பார்க்கும் இடமெல்லாம் - நல்ல
பச்சைவயல் சூழ்ந்த - புகழ்
பள்ளிக்குடியிருப்பூரில்
புள்ளினம் துள்ளும் எங்கும்
புதுமைகள் காணும் என்றும்
வள்ளலார் வாழ்ந்தார் இங்கு
வளம்பெறு குணமும் பெற்றார்

கலைமதி கழகத்தின் வழிகாட்டியாக நின்று
செயற்பட்டீர் சாதனைகள் பல நிகழ்ந்த
முந்திப்போய் பிந்தி வரும் ஆசானாய் நீர்
இருந்தீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தின் முதல் ஆசானாய்
கல்லூரியை எதிர்காலச் சந்ததிக்கு
வளப்படுத்தினீரே
மாணவர் உடல் நல ஆரோக்கியத்திற்கு
அழகான மைதானமும் அமைத்து தந்தீர்

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில்
கண்ணியத்துடன் பணியாற்றி
பள்ளிக்குடியிருப்பில் கல்விச்சாதனை
நிகழ்த்தி பலரை அரச துறைக்கு இணைத்தீர்
அதை நாம் என்றுமே மறவோமே

பேரும் புகழும் வேண்டாது
சமூகப்பணிப் பல செய்த நீங்கள்
கல்வியில் எம் மண்ணிலேயே ஓய்வு பெற்று
இன்று இறைவனடி சேர்ந்துள்ளீர்
இச் செய்தி கேட்டு கல்விச் சமூகம்
பெரும் கவலையடைகிறது
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள், பாடசாலைச் சமூகம்
தி/மூ/கலைமகள் இந்துக் கல்லூரி
பள்ளிக்குடியிருப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியம் ஆனான்...

நீராரும் மாவலியாள் நின்றுலவும் முதூரின்
பேரான பள்ளிக்குடியிருப்பூர் – சீராரும்
ஆறுமுகம், தங்கத்தாள் ஈன்றெடுத்த இரத்தினமே!
கூறுமுந்தன் புகழ் வாழும் நீடு.

பொன்னையர் ஓடையும் பொலிகதிர் வயலும்
        செந்நெல் அரிசியும் செறிகதிர் கோளமும்
அன்ன முலாவும் அலைநீர் கயமும்
        ஆ நிரை சொரியும் அமுதெனும் பாலும்
இன்னருக் தேனும் நிறை முளி தயிரும்
        இல்விருந் தோம்பும் இனியநற் பண்பும்
தன்னகம் கொண்ட தமிழினம் வாழும்
        பள்ளிக்குடியிருப்புப் பெண்ணும் சிற்றூர்.

தென்கைச் சோழன் தேர்ப்படை நடத்திய
        தெருநகர் எங்கும் செந்தமிழ் ஓங்கும்.
முன்னவர் ஆடிய கூத்தும் குரவையும்
        முன்றில் தோறும் இசைபட ஒலிக்கும்.
பண்ணரும் புகழ்பெறு பண்டைய மண்ணில்
        நல்லருங் குடும்பத்தலைமகன் எனவே
சொல்லருங் குணத்தோன் சீர்பெறு கனக
        ரத்தினம் உதித்தனன் மாண்புகள் ஓங்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் ஆணைகள் தன்வளம் மேற்றோன்,

அன்புடன் பிறப்புகள் சிறந்திட உழைத்தோன்.

புன்னகை ஒன்றே தன்னகை என்று

போற்றி யணிந்த பொன்மனச் செம்மல்

தந்தை சொல் மந்திரம் சிரமேற் கொண்டோன்,

தமிழ்மொழி ஒன்றே தன்னுயிர் என்றோன் ,

தன்னரும் பாதக் காலணி மறந்து

தரையில் நடந்தே காலங் கழித்தோன்.

அறிவொளி சிந்தும் ஆசான் ஆகி

மாணவர் நலம் பெற நாளு முழைத்தோன்

அறவழி ஒன்றே நிறை வழி என்று

அல்லும் பகலும் அதன்வழி நடந்தோன்.

சொல்லும் செயலும் ஒருபட வாழ்ந்த

சொற்கள் சேராத் தூயவன் ஆனான்.

முல்லைச் சிரிப்பால் மூர்க்கன் தனையும்

மாற்றிடும் மந்திர வித்தைகள் கற்றோன்.

நாடியும் நரம்பும் தமிழெனத் துடிக்க

தமிழ்மொழி ஒன்றே மூச்செனக் கொண்டோன்.

வாடிய கல்விப் பயிர்கள் செழிக்க

வற்றா அறிவுத் தூமழை ஆனான்.

எந்தையும் தாயும் குலவிய மண்ணில்

இறுதி வரைக்கும் வாழ்ந்தே முடித்தான்.

சிந்தையில் சிலையாச் சித்திரம் ஆனான்.

சீரிய மண்ணில் காவியம் ஆனான்

இ.ம. ஜெகதீசன் குரூஸ்
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்
மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகரெத்தினம் ஐயா
## இனி எம்முடன் இல்லை...

இன்று மழை வரப்போகிறது போல இருக்கே என வானத்தை அண்ணாந்து பார்க்கிறேன். முகில் கூட்டம் கூட்டமாக சேர்ந்துகொண்டிருக்கிறது. ஈரோஸ் அமைப்பின் ஆரம்பகால உறுப்பினர் அங்கயர்கன்னியின் அழைப்பு வருகிறது. கதைத்துக்கொண்டிருக்கும்போது என் துணைவியின் அழைப்பும் வருகிறது. கதைத்து முடித்ததும் சேனையூர் பள்ளியிலே எங்கள் வகுப்பிலே படித்தவர்களின் புலனக் குழுவில் பல செய்திகள் வந்திருந்தன. பள்ளித்தோழன் கலைச்செல்வனின் செய்திதான் கண்களில் தெரிகிறது.

நெஞ்சு கனக்கிறது. தொடர்ந்து படிக்க முடியாது கண்களை நீர் என்னை அறியாமலே மறைக்கிறது. மனம் கனகரெத்தினம் ஐயாவை எண்ணி விம்முகிறது.

சிறிது நேரத்தில் ஐயாவை மனதில் நினைக்கிறேன்.

1982 இல் ஒரு நாள்...

"திருச்செல்வம் என்னடாப்பா தம்பலகமத்தில இருந்து இப்பதான் வந்தனியா" திரும்பிப் பார்க்கிறேன்.

இரண்டு கால்களிலும் செருப்புகள் இல்லாத கறுத்த ஒல்லியான வெள்ளை நிற மேலங்கியில் வெள்ளைநிற வேட்டியுடன் என் பின்னால் நின்றுகொண்டிருந்தார். கிட்டு என்று பலரால் செல்லமாகவும் கனகர் என அன்பாகவும் அழைக்கப்பட்ட கனகரெத்தினம் ஐயா.

எங்களுக்கு தமிழ் படிப்பித்த உன்னதமான மனிதன் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டைக்கிளவி, குழுக்குறி என்பவை கனகரெத்தினம் ஐயாவால் என் சிந்தையில் ஆழமாக முழுமை பெற்றவை.

தனித்தமிழில் கதைக்க வேண்டுமென்பதை அடிமனதில் எனக்குப் பதிய வைத்தவர்களில் கனகரெத்தினம் ஐயாவும் ஒருவர்.

சேனையூர் மகா வித்தியாலயம் அகதிகளால் நிறைந்திருந்த நாள்களில் ஐயாவுடன் இணைந்து அதிகாலை நான்கு மணியிலிருந்து மனிதக் கழிவுகள் அகற்றிய அன்றைய நாள்கள் யாரும் அறியாமல் மனதை புடம்போட வைத்தவை. ஐயாவின் துணைவியும் அவரது பிள்ளைகள் அனைவரும் அப்பணியில் ஈடுபட்டதனை துரைரெட்ணசிங்கம் ஐயாவைத் தவிர யாரும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தன்னடக்கத்தின் இருப்பிடமாக நடமாடிய அன்புள்ளம் எங்கள் தமிழ் ஆசான்.

கால்பந்து, கைப்பந்து விளையாடுவதற்கு உந்துதல் தந்த உயர்ந்த விளையாட்டு வீரனாக ஐயா விளங்கியவர்.

**எனது முதல் பொத்தகமான "உயரப் பார்" வெளியீட்டு நிகழ்விற்கு ஐயாவைத்தான் நான் "முதன்மை அழைப்பாளராக" அழைத்திருந்தேன். எங்களது அதிபர் துரைரெட்ணசிங்கம் ஐயா அவ்வேளையில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அவரிடம் இதனைத் தெரிவித்து சிறப்பு உரையாளராக நீங்கள் வரவேண்டும் எனக் கோரியபோது "கனகர் உண்மையில் பொருத்தமானவர், நானும் வருகிறேன்" என்றார். கனகரெத்தினம் ஐயாவோ துரைரெட்ணசிங்கம் ஐயாவை முதன்மை அழைப்பாளராக அழைக்குமாறு கோரியிருந்தார். தமிழ் ஆசானுக்கு எனது கைமாறினை செலுத்தும் ஒரு வாய்ப்பாக இதனை ஏற்றுக்கொள்ளுமாறு கூற இயைந்து நிகழ்வை சிறப்பாக்கியவர்.**

செருப்பணியா ஐயாவை செருப்புடன் எனது பொத்தக வெளியீட்டன்றுதான் நான் முதன்முதலாகக் கண்டேன்.

எனது நாவலான உயிரோடு நானாகவில் பள்ளிக்குடியிருப்பில் உள்ள ஒரு தந்தைப்பாத்திரத்திற்கு கனகரெத்தினம் என்று எங்கள் தமிழ் ஆசானின் பெயரையே வைத்து மகிழ்ந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்தளவிற்கு என் மனதில் தாக்கம் செலுத்திய பெருந்தகை அவர்.**

**ஐயாவின் நினைவுகளும் அவரது சிந்தனையுடனான நகைச்சுவைகள் மாத்திரமே இனி நம்முடன் எஞ்சப் போகின்றன.**

அவரது குடும்பத்தினருடன் எனது துயரினையும் பகிர்ந்துகொள்கிறேன்.

**இன்று அவருக்காக முகில்களும் மண்ணைத் தொட்டு நிற்கின்றன போலும்.**

இனி கனகரெத்தினம் ஐயா நம்முடன் இல்லை.

**ஐயாவின் மாணவன்.**

கதிர். திருச்செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்

பள்ளி ஊரின் பண்பலைகளை
பக்குவமாய் வளர்த்தவரே
பள்ளி ஊரின் பெருமைதனை
பார்போற்ற பலர் அறியச் செய்து - எங்கள்
குலவளத்தின் பெருமை தனை
பறைசாற்றி நின்றவரே!

நித்தமும் சூரியன் உதயமாகும் முன்னே
மலர்கள் தனைக் கொய்து
பள்ளி ஊரின் சித்தி விநாயகனை
சிந்தையில் வைத்து - தினமும் நீராட்டி
மலர்களால் அலங்கரித்து
சித்திகள் பல பெற்றவரே பெரியப்பா நீங்கள்!

குடும்பத்தின் ஒளி விளக்காயிருந்து
உடன் பிறப்புக்களை பள்ளி ஊரிலே
மிளிரச் செய்ததோடு மட்டும் நின்றுவிடாது
உடன் பிறவா உறவுகளையும்
உடன் பிறப்பாக எண்ணி - அவர்களை
தலைநிமிரச் செய்த தலைமகன்
பெரியப்பா நீங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பானது ஆசானோடு
மட்டும் நின்றுவிடாது
வயல் வெளியிலும் கூட
தொடர்வதனைக் கண்டு - எம் ஊரே
வியந்து போனதே பெரியப்பா!

நீங்கள் அதிபர், ஆசான் என்ற
கர்வம் தனை மறந்து இரவு பகல்
மழை வெயில் பாராது
வயல் வெளியிலும் உடல் உழைப்பை நம்பி
களத்து மேடுதனில் களமிறங்கி
வியர்வை தனை சிந்தி களைகள்
பல பிடுங்கி உழைப்பாழியாயிருந்து
குடும்பத்தினை நிர்வகித்துச் சென்ற
உத்தமர் நீங்களல்லவோ பெரியப்பா

எனது அண்ணாவையும்
என்னையும் கண்டு - நீங்கள்
சிந்தை கலங்கி நிற்பதனைக் கண்டு
நான் வியந்து போன நாட்களும் உண்டு.
எங்கள் இருவரையும் டபிள்அக்ட்
என்று கூறி எங்களை மகிழ்வித்த
நாட்கள் தனை நான் - எவ்வாறு
மறவேன் பெரியப்பா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை காணும் போதெல்லாம்
எமது அருகினிலே அழைத்து
அன்பான மொழி நடையில்
அழகான முறையில் ஆறுதல்
வார்த்தைகளோடு அறிவுரை பல கூறி
எங்களை வழிநடத்திச் சென்ற
பண்பாளர் நீங்கள் பெரியப்பா!

உமது வீட்டின் அருகினிலே இருந்து
உங்களை என் கண்ணெதிரினிலே
பார்த்து வளர்ந்ததனாலும்,
உமது செயல்களையும்அறிவுரைகளையும்
பின்பற்றி எனது சிந்தனையில் ஏற்றியதனாலேயே
இன்று நானும் ஓர் ஆசானாய்
திகழ்வதனை எண்ணி
பெருமையடைகின்றேன் பெரியப்பா!

மாதங்கள் ஆறு கடந்த பின்னும்
உங்கள் நினைவலைகளை சுமந்த வண்ணம்
எனது பெரிய தந்தை நீங்கள்
என்பதனை எண்ணி பெருமைகொள்ளும்
மகனாயிருந்து உங்களது ஆத்மா
சாந்தியடைய - இறைவனைப்
பிரார்த்திக்கின்றேன் பெரியப்பா!

மகாலிங்கம் துஷாந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத்தின் உச்சத்தில்...

பௌதீகமாய் நீங்கள் மறைந்தாலும்
நினைவெங்கும் நிறைய முழு தத்துவமாய்
கண்டம் கடந்து பார் எங்கும்
நிறைந்தளிய இறைவனாய்
நான் வாழ எண்ணம் கொள்ளும்
பெரு வாழ்வையும் நிகழ் வாழ்வு தனில்
முத்தி நிலை அடைந்த உத்தம ஆத்மா
முத்தமிழ் வித்தகரே உங்கள் ஆங்கிலம்
பரம்பரை குருதி வழி ஏறி என் வாய்வழி
வரக்கண்டு வியக்கிறேன்
பள்ளியூர் அபிமன்யூவாய் தந்தையின்
கருவேறி அவர் கூற கேள்வழி
வாழ்வழி முறையில் வாழ்நாள் விம்பம் அமைந்து
வீரராய், கவிஞராய், தந்தையாய்,
தொலைநோக்கியாய், தலைவராய்
குருவாய், சகலகலா வல்லவராய், வித்தகராய்
கற்பனையில் நான் கண்ட உச்ச புதினரே
நீர் செய்த மொத்த தியாகத்தின்
உச்சத்தில் ஏறி நின்று முத்துக்குளிக்கும்
பெறா மகனாய்...

ஆ.செ. பிரசாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடிப் பெரியப்பா...

ஆறுமுகம் தங்கப்பிள்ளையின்
தலைமகன் எனது கண்ணாடிப்
பெரியப்பா...

தலைமகனாக பலர் ஜனனம்
எடுக்கலாம் ஆயின்,
தலை மகனாக கடமையை
கடைசிவரை பொறுப்பேற்க எத்தனை
பேரால் முடியும்?
அந்த தன்னலமற்ற ஆலமரத்தின்
செல்வமாகிய கிளையில் தொங்கிய
விழுது நானெனலாம்
தவணை பரீட்சை முடிந்ததும்
அடைவுமட்டம் பார்வையிட
தவறியதில்லை ஒருபோதும்

பாடசாலை காலம் மட்டுமல்ல, வேலை
தளத்திலும் என் நிலை என்ன என்று
எனை வந்து பார்த்த ஒரே தெய்வம்
எனது முதல் வேலை முடிப்பு கடிதம்
முதல் கடுகதி வாழ்வியலில் தங்கள்
அன்பும் ஆலோசனைகளும் பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன் பிறந்தோர் பெரிய அண்ணன்
என அதிக மரியாதையுடன் உங்கள்
முன் கதைக்க தயங்கும் அந்த பழைய
நாட்களில் உங்கள் கண்ணாடியை
அணிந்து உங்கள் மடியிலேயே அமரும்
வாய்பினைப் பெற்றவனானேன்.
தம்பதி சமேதராக என் இல்லம் நாடி
தங்களின் அடுத்த தலைமுறையையும்
ஆசிர்வதித்து சென்றமையும் என்றும்
மறவேன்

அன்றுரைத்த பல அறிவுரைகளின்
புரிதல் இப்போது புலப்படுகிறது

மண்ணில் ஒரு சிலரே பலதும் அறிந்த
வித்தகராகவும்,
தன்னலமற்றவராகவும் இறவா
புகழுடன் வாழ்வாங்கு வாழ்வர் - அந்த
ஒருவர் என் கண்ணாடி பெரியப்பா

பெரியம்மா இறுதி கிரியையில் என்
தெய்வம் என்றார். ஆம் தெய்வமாகவே
வாழ்ந்து
எம்முள் தெய்வமாக விதைக்கப்பட்டார்
என் கண்ணாடிப் பெரியப்பா.

திருமதி. பிரியா மேனகாந்
தி/பள்ளிக்குடியிருப்பு - மட்டக்களப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பாவின் வாழ்வியல் பெரிய பாடப்புத்தகம்

ஆ.செ. பிரசாந்

எனது பெரியப்பா திரு. ஆறுமுகம் கனகரெட்ணம் அவர்கள் 1942.6.8ல் பிறந்து 2023.8.30ம் திகதி வரை சுமார் எண்பத்தொரு 81 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்த வாழ்க்கை முறைமைகள் அனைத்தும் ஏனையோர் கற்றுணர்ந்து பின்பற்றி தமது வாழ்வையும் நேரிய பயன்மிக்கதாய் அமைத்துக்கொள்ள உதவும் பாடப்புத்தகம் போன்றதாகும்.

**அவரது இளமைக்கால கற்றல் நிகழ்வுகள், மகனாக, மாணவனாக, அண்ணனாக, ஆசிரியராக, அதிபராக, பிரதி அதிபராக, விளையாட்டு வீரராக, பயிற்றுவிப்பாளராக, வாசகனாக, பாடகராக, கலைத்துறை ஆர்வலராக, சமூக சேவகராக, சமூக இணக்கப்பாடுடையவராக, சமூக வழிகாட்டியாக, அரசியல் வரலாறுகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தியவராக, சமய வழிகாட்டியாக, ஆலோசகராக ... இவ்வுலகில் வாழ்ந்த ஒவ்வொரு நிகழ்வுகளும் - வாழ்வியல் முறைகளும் பின்பற்றப்பட வேண்டியவைகளே.**

ஆரம்ப கல்விகற்ற காலங்களிலும் இடைநிலை கல்வி கற்ற தி/பள்ளிகுடியிருப்பு அ.த.க பாடசாலை, மூதூர் சென். அந்தனிஸ் ம.வி. திருகோணமலை இந்துக்கல்லூரி, மட்/வந்தாறுமூலை மகா வித்தியாலம் மிகச்சிறந்த நல்லொழுக்க, கீழ்ப்பணிவான, தூய்மையான, ஒழுங்கு, வாசிப்பு, கற்றலில் ஊக்கமுடைய, விளையாட்டு வீரராக, பாடகராக திகழ்ந்தமையை அறியும் போது - நாமும் இவ்வாறு நடக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனாக - தலைமகனாக இவர் தனது தந்தையார் சுகயீனமுற்ற வேளை - கொழும்புக்கு அழைத்துச்சென்று வைத்தியத்திற்கு உதவியமை. தந்தையை இழந்தும் சகோதரர்களின் கல்வியை தொடர தனது கல்வியை நிறுத்தி - ஆசிரியராகி குடும்ப - மாட்டுப்பட்டிகளையும், வயல்களையும் சகோதரர்களுடன் இணைந்து செய்து - அனைவரையும் தொடர்ந்து கற்பிக்க செய்து நன்னிலைக்கு ஆளாக அர்ப்பணிப்பாக செயற்பட்டமை ஒரு அண்ணனின் குடும்ப பணி என்ன எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணம்.

ஆசிரியராக மிக கஷ்டமான பின்தங்கிய பிள்ளைகளுக்கு தி/நல்லூர் அ.த.க வித்தியாலத்தில் கற்பித்தலில் ஈடுபட்டார். நல்லாசிரியருக்கான அனைத்துப் பண்புகளுமுடைய ஆசிரியத்துவத்தை இறுதி வரை கடைபிடித்தார். ஆசிரியப்பயிற்சி கலாசாலையில் தனது கல்வி விளையாட்டு கலைத்துறை திறமைகளை வெளிபடுத்தி சிறந்து விளங்கினார்.

அதிபராக தி/பள்ளிக்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில் சிறந்த முகாமைத்துவ தலைமைத்துவத்தை - சமூக இணக்கப்பாட்டுடன், ஆதரவுடன் பல அபிவிருத்திகளை செய்திருக்கின்றார்.

பிரதி அதிபராக தமது பணியை மிகவும் முன்மாதிரியாக செயற்பட்டமையை தேசிய கல்வி நிறுவகத்தில் பதிவுகள் சிறப்பாக எடுத்தியம்புகின்றன. இவை தொழில்சார் வாண்மைத்துவத்தில் முன்மாதிரியை பலர் கூறக்கேட்டிருக்கின்றோம். இவரிடம் கற்க வேண்டிய பாடங்களாகவே இவை அனைத்தும் அமைந்திருந்தன.

தான் விரும்பியவரை மனைவியாக ஏற்று சிறப்பாக இல்லற வாழ்க்கையை நடாத்தியிருக்கின்றார். பிள்ளைச்செல்வங்களையும் கற்பித்து இன்று நன்னிலையிலும் வாழ வழிவகுத்தமையும் முன்மாதிரியே. அத்துடன் மனைவியின் பெற்றோர்களின் வாழ்வின் அந்தம் இறுதிக் கால பராமரிப்பு. மனைவியின் சகோதரர்களின் கல்வி - வாழ்க்கை - பிள்ளைகளின் கண்காணிப்பு என ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய பெருந்தகையாக உதவியமை - பங்களித்தமை அனைத்தும் அன்னாரிடம் கற்க வேண்டிய பாடங்களே.

விளையாட்டுத் துறையில் சிறந்த ஓட்ட வீரனாக, கரப்பந்தாட்ட, கால்பந்தாட்ட - பயிற்றுவிப்பவராக, வீணை வாசிப்பவராக - ஏனையோரையும் இணைத்து கிராமத்தின் இசைக் குழுவை இயக்கிமை என்றும் மறக்கமுடியாத பணி.

சமயத்துறையில் சிறந்த தேவார, திருவாசக முற்றோதல்களிலும் ஆலய வழிபாடுகளில் 17 தடவைகளுக்கு மேலாக அடியார்களோடு கால் நடையாக கதிர்காமம் சென்றமை - கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், நல்லூர், மாவிட்டபுரம் முதலான ஆலயங்களுக்கும் அடிக்கடி வழிபாட்டிற்காய் அடியவர்களுடன் செல்கின்றமை, இறைவழிபாட்டின்பால் உள்ள நிம்மதியும் மன அமைதிக்காகவும், என்ற செயற்பாடுகள் அனைத்தும் - மிகவும் கற்க வேண்டிய பாடங்களே.

காந்திய வாழ்வியலையும் - உண்மை உழைப்பு உயர்வு எனும் கூற்றுக்கு அமைவாக - எளிமையான - பகட்டு இல்லாத வெள்ளை உடை மட்டும் அணிபவராக, என்றும் உண்மை நேர்மை சத்தியத்தைக் கடைப்பிடித்தவராக வாழ்ந்தமை, ஓய்வு காலத்திலும் நூலகம், நூல்கள், விவசாயம் என்பவற்றில் ஈடுபாடுள்ளவராகவும், சிறுவர்களுக்கு கதை கூறுபவராக, கதை சொல்லியாக, அவர்களை மகிழ்வாக நல்வழிப்படுத்துவதிலும், பக்தியோடு பல தல யாத்திரைகளை ஏனையோரையும் இணைத்து செயற்பட்டமை முதலான பல விடயங்களில் பின்பற்றக்கூடிய வழிமுறைகளே - இவைகள் அனைத்துமே சிறந்த கற்பித்தலை வழங்கிய பாடப்புத்தகங்களே.

கிராமத்தின் முன்னேற்றத்திற்காக எடுத்த நடவடிக்கைகள் மக்களுக்கு முன்மாதிரியான தலைவர் - பதவிகள் இல்லாத தலைவனாக இருந்து கல்வி, பொருளாதாரம், சமூக முன்னேற்றங்கள் அனைத்திலும் அவர் ஆற்றிய பணிகள் ஒவ்வொன்றும் பள்ளிக்குடியிருப்பின் நிலையான பேண்தகு அபிவிருத்தியை அடைந்துள்ளது எனக்கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கல்வி, விளையாட்டு, வாசிப்பு, வாழ்வு எல்லாவற்றிலும் பெரியப்பாவின் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் நிறைந்துள்ளன. நான் மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி அங்கு சென்று கற்கத் தொடங்கி 3ம் நாள் ஏற்கனவே இலங்கை மத்திய வங்கி பரீட்சையில் சித்தியடைந்து இரு நேர்முகப் பரீட்சையிலும் தேறி நியமனக் கடிதம் வந்தது. பெரியப்பா அறிந்து வீட்டிற்கு வந்தார். "வெளிநாடுகளில் எல்லாம் வேலை செய்து கொண்டுதான் கற்பார்கள். நீர் வேலைக்குச் செல். அங்கும் தொடர்ந்து கற்று முன்னேறலாம்" எனக் கூறினார். பெரியப்பா கூறினால் மறு பேச்சுக்கு எங்களிடம் இடமில்லை. இலங்கை மத்திய வங்கிக்கு சென்றேன். செல்லமுன் மத்திய வங்கி பற்றி பல விடயங்களைக் கூறினார். இன்றும் அதைத் தொடர்ந்தே மகிழ்வான வாழ்வு கிடைத்தது.

**பெரியப்பாவின் முன்மாதிரியான வாழ்வியல் நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு பெரிய பாடப்புத்தகம் என்பேன்.**

**ஆறுமுகம் செல்வநாயகம் பிரசாந்**
**பள்ளிக்குடியிருப்பு**
U.K.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி/பள்ளிக்குடியிருப்பு வரலாற்றுப் பார்வை

# நூல் வெளியீட்டில்


"வரலாறு சமூகவியல் பண்பாட்டுடனான பன்முக தரிசனம்" எனும் எண்ணக்கருவை தாங்கிய இந்நூல் வெளியீட்டு விழாவில் முதன்மை அழைப்பாளராகவும், முதல் பிரதி பெறுபவராகவும் கலந்து சிறப்பித்த தருணங்கள். இந்நூலிலும் திரு ஆறுமுகம் கனகரெட்ணம் அவர்களது கல்வி, கலை விளையாட்டு சமய சமூகப்பணிகள் பற்றி எழுதப்பட்டுள்ளது. அதை அவரும் வாசித்துள்ளார். வாழும் பொழுதே அன்னாரை எழுதியும் மகிழ்வித்தோம் எனும் பெருமையில் நான்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Band வாத்தியங்களுடன்
முதன்மை விருந்தினர்
ஆறுமுகம் கனகரெட்ணம்
அவர்கள்
அழைத்துவரப்படலும்
விளக்கேற்றலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு/பள்ளிக்குடியிருப்பு வரலாற்றுப் பார்வை நூல் வெளியீட்டில்
முதல் பிரதியை செல்வி மேனகாந் அக்ஷராவிடம் பெற்ற வேளை








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர் திருச்செல்வம் அவர்களின் "உயரப்பார்" நூல் வெளியீட்டு விழாவில், திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் முதன்மை அழைப்பாளராக தனது தமிழ் பாட ஆசான் திரு. ஆறுமுகம் கனகரெட்ணம் அவர்களை பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட வேளையில் 2 நிமிடம் மட்டும் உரையாற்றிய பின் அவரது ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய நண்பர்களான திரு. க. துரைரெட்ணசிங்கம் அதிபர், பா.உ சைவப்புலவர் கலாபூசணம் திரு. செ. விபுணசேகரம் உதவிக்கல்விப் பணிப்பாளர் அவர்களுடன் மகிழ்வான தருணங்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திபள்ளிக்குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தின்
புதிதாக நிர்மானிக்கும் மூலஸ்தானம், கோபுரம் என்பவற்றின்
அடிக்கல் நடும் நிகழ்வில்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி தகனக் கிரியைக்காக...
# தி/பள்ளிக்குடியிருப்பு இந்து மயானத்தில்

தனது பெரியப்பா ஆறுமுகம் கனகரெட்ணம் அவர்களின் இவ்வுலகு விட்டு நீங்கிய செய்தி அறிந்து 30.08.2023 அன்று லண்டனிலிருந்து இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக மறுநாள் பிற்பகல் 1.30க்கு விமான நிலையத்தில் இருந்து 5.15க்கு பள்ளிக்குடியிருப்பை வந்தடைந்தார். அன்றைய தினம் 3.00 மணியிலிருந்து 5.40 வரை பெருமழை பெய்தது. இறுதி நிமிடத்தில் தனது பெரியப்பாவை சுமக்கவும் - வணங்கவும் வாய்ப்பேற்பட்டது. இறைவனின் நாட்டம்... உண்மை அன்புக்கு என்றும் எங்கும் இடமுண்டு...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியலில்...

ஆறுமுகம் கனகரெட்ணம் அவர்கள் தனது வாழ்வியல் காலங்களில் சிறப்பாக மதிப்பார்ந்த வாழ்க்கை பாணியைக் கொண்டிருந்தார்.

தந்தையை இழந்ததால் தொடர்கல்வியை பல்கலைக்கழக கல்வியை பெற முடியாத துர்ப்பாக்கிய நிலையில் வாசிப்பு – சுயகற்றல் ஊடாக கற்க வேண்டியவற்றை சிறப்பாக கற்று வாழ்க்கையை முன்மாதிரியாக அமைத்துக் கொண்டவர்.

திருவள்ளுவரின் திருக்குறளை கற்பதில் ஆர்வமும் – ஆய்வுக் கட்டுரைகளை எழுதியும் – கற்பித்தும் ஆழமான அறிவைப் பெற்றிருந்தார். மகாத்மா கந்தியடிகளின் தத்துவ கருத்தியலிலும் ஆழமான அறிவு அனுபவத்தையும் வாழ்வியலில் கடைப்பிடித்தமையும் இன்று அவரைப்பற்றி நினைவு கூருவதற்கு கருப்பொருளாக அமைந்தது எனலாம்.

கல்வியறிவையும் பல்வகைத்திறன்களையும், பல்திறன் விழுமியப் பண்புகளையும் தன்னகத்தே கொண்ட வாழ்வியல் முறைமைகள் சிறந்த வரலாறாக அமைந்தமை எதிர்காலத்தவர்களும் பின்பற்றக்கூடிய சிறப்பான தமது வாழ்வியலை அமைத்துக் கொள்வதற்கும் வழிவகுக்கும்.

**இந்நூலில் இடம்பெறாத பல விடயங்கள் உள்ளன. எதிர்காலத்தில் அவர் பற்றிய பூரண ஆய்வு மேற்கொண்டு சமூகத்திற்கு ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உண்டு என்பதை உணர்வேன்.**

அவர் பற்றிய பல ஆக்கங்களை தந்துதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நூலை சிறப்புற அமைத்துதவிய ஷஹானா கிறாபிக்ஸ் நிறுவனத்திற்கும் உளம் நிறைந்த நன்றிகள்.

இந்நூலை வாசித்து வாழ்வியலின் சிறப்புகளை உணர்ந்து கொள்ள அன்பாக வேண்டுகின்றேன்.

நன்றி.

ஆறுமுகம் செல்வநாயகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org